விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 06 சனிக்கிழமை (21.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

# உயிரியல் பிரிவில் ஹாட்லி கணித பிரிவில் யாழ்.இந்து

மாவட்ட ரீதியில் முதலிடம்


இ.யதுசன்


சி.தினேஷ்


ஜெ.நிதுஷா


(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நாடளாவிய ரீதியில் நேற் றைய தினம் வெளியிடப்பட்டன. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் யாழ்.ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிவஞான செல்வம் தினேஷ் உயிரியல் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் 6 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அதேவேளை யாழ். இந்துக் கல்லூரி மாணவன் இராஜசேகரன் யதுசன் கணிதப்பிரிவில் 3 ஏ சித்திகளைப்பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். இதனைவிட யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி நிதுஷா ஜெயக்குமார் வர்த்தகப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று 19-ம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்கள் மீது இராணுவ நெருக்கடி

## தென்னிலங்கை பிரதிநிதிகளிடம் முதலமைச்சர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வெளிப்புறத்தோற்றத்தில்தான் இராணுவத்தின் நெருக்கடிகளும் சோதனைச் சாவடிகளும் தளர்த்தப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் பல இன்னல்களை எமது தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றனர் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தென்னிலங்கையைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுக்கு பதிலளித்துள்ளார்.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடலின் போது தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த பிரதேச சபைகள் மற்றும் உள் 19-ம் பக்கம் பார்க்க

## பால்மா தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக பால்மா வகைளுக்கு பாரியளவில் தட்டுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக பால்மா விற்பனை இடம் பெற்று வருவதாகவும் நுகர் வோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

வர்த்தக நிலையங்களில் பால்மா வகைகளுக்கு அதிகளவில் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் இதேவேளை தென்னி 19-ம் பக்கம் பார்க்க

## மினிபஸ் விபத்து; நடத்துநர் பலி

(குருமன்காடு)

அநுராத புரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த சுற்றுலா மினிபஸ் ஒன்று தடம் புரண்டதில் ஒருவர் பலியானதுடன் 19 பேர்படுகாயமடைந்ததுடன் 6 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இச் சம்பவம் நேற்று இரவு 8.45 மணியளவில் புளியங் குளம் சந்தியடியில் இடம் 19-ம் பக்கம் பார்க்க

## தொண்டர் ஊழியர்கள் தொடர் போராட்டம்!

### வைத்தியசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர் ஊழியர்கள் இன்று ஒன்பதாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதனால் யாழ். வைத்தியசாலை வளாகத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தங்களுடைய போராட்டத்திற்கு உரிய தீர்வு கிடைக்காவிடில் விபரீதமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைய ஏற்படும் என்று எச் சரிததையடுத்தே பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநருடனான நேற்றுமுன்தின சந்திப்பில் தொண டர்களில் 80 பேருக்கு முதற்கட்டமாக நிரந்தர நியமனம் வழங்குவதாகவும் ஏனையவர்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் பணியில் இணைத்துக் 19-ம் பக்கம் பார்க்க

## அரசியல் தீர்வை வெளியில் தேடாதீர்கள் த.தே.கூட்டமைப்பிற்கு மகிந்த அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் பிரச்சினைக்கு வேறு நாடுகளிடம் தீர்வு தேடுவதற்குப் பதிலாக, வெளிநாடுகளுக்கும் முன்னுதாரணமாக விளங்கக் கூடிய விதத்திலான உள்ளூர் தீர்வுத் திட்டத்தை எட்டுவதற்காக தம்மோடு இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுததுள்ளார்.

2014-ம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட வாக்கெடுப்பை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கையை எண்ணி இலங்கையே பெருமைப்படும் தீர்வுத்திட்டத்தை எட்ட 19-ம் பக்கம் பார்க்க

## 95 மேலதிக வாக்குகளினால் நிறைவேறியது பட்ஜெட்

(கொழும்பு)

அரசாங்கம் நாடாளுமன்றத்தில சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 95 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் கிடைத்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. உளளிட்ட கட்சிகள் வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக 20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

மாதகல்மேற்கு நுணசையடைப்பு நிலக்காணி ஏழு (07) பரப்பு உறுதியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0776936744, 0776653723 (4693)



## விற்பனைக்கு

JOHNDEE

ரக்டர் பெட்டியுடன் (5104)

தொடர்பு:- 0774801734


# மாணவிகள் மூவர் வைத்தியசாலையில்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதி விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பாடசாலை மாணவிகள் மூவர் விபத்துக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்று நண்பகல் யாழ்.மருதனார்மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் இராமநாதன் கல்லூரி மாணவிகளான சிவானந்தராசா சர்மினா (வயது -16), இராமச்சந்திரன் லக்சனா (வயது 17), செந்தூர்செல்வன் றொபினா (வயது 16) ஆகிய மூவருமே காய மடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவிகள் மருதனார்மடம் மானிப்பாய் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் எதிரே வந்த சிறியரக கூலர் வாகனமொன்று மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த இவர்கள் மூவரும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்தை அடுத்து அவ்விடத்துக்குச் சென்ற சுன்னாகம் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டதுடன் குறித்த வாகனத்தையும் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (செ-6)


# 17-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1952 - 12 - 17



இறப்பு 1996 - 12 - 29

அமரர்

## ஜெயக்கொடி சிவமணி

எமையெல்லாம் நல்வழிப்படுத்தி
இறுதிவரை ஆசி வழங்கி
வானுறையும் தெய்வமாகி விட்ட - அன்னையே
ஆண்டுகள் பதினேழு ஆனாலும்
உன் அன்பு முகத்தை மறக்க - முடியவில்லையே
அம்மா உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டு
என்றென்றும் அழியாது

கோண்டாவில் வடக்கு,
சிறிவாகேஸ்வரி வீதி, கோண்டாவில்.

தகவல்
- குடும்பத்தினர் -

(C-5837)



# காணவில்லை



## கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்

நயினாதீவை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட V.M.R&CO (கொழும்பு) புகையிலை கடை மனேஜருமான மேற்படி நபரை 04.09.2013 மாலை முதல் காணவில்லை. தயவு செய்து இவரைக் காண்பவர்கள் மேற்படி தொலைபேசி இலக்கத்

0750422291/0112362883 (5108)



## வீட்டுப் பணிப்பெண் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப் பெண் தேவை.

தொடர்பு : 077-0711018 (இ)



## தவறிவிட்டது

சிவகுமாரன் தர்சிகன் என்பவருடைய நீலநிற கைப்பை அடையாள அட்டையுடன் (972522414V) செம்மணி றோட்டுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 0214924450,0772095858 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் (சி-5546)



# மனம் நெகிழ் அஞ்சலிகள்



அமரத்துவம் அடைந்த எனது அன்பு ஆசான் பண்பின் சிகரம்

## அமரர் அருணாசலம் நமசிவாயம்

(புல்லாங்குழல் வித்துவான்)

அவர்கள் எல்லாம் வல்ல பரம்பொருளில் சங்கமிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்னாரின் முதன்மை மாணவன்,
குணராஜா நக்கீரன்.
புல்லாங்குழல் வித்துவான்.

(இ)



# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

17.12.2013 முதல் 22.12.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

## நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-5835)


# தொடரும் முறுகல்!

இலங்கையில் தொடர்ந்தும் முஸ்லிம், இந்து, பௌத்தம் என்ற அடிப்படையில் முறுகல் தொடர்வதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் காரணமாக அடுத்த வருடத்தில் அதிகமான அகதிகளுக்கு உதவி செய்ய வேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்படும் என்று அமெரிக்கா காங்கிரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போர்முடிந்த பின்னர் சுமார் 6ஆயிரம் அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பினர். (செ-11)




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. வைத்திலிங்கம் கிருஷ்ணதாசன்

உதவி அத்தியட்சகர் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம.

(Assistant Superintendent, Measurement Units Standards and Services)

யாழ். மாவட்டச் செயலகத்தில் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி தற்போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள்
நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள்.
சமூக பாதுகாப்புச் சபை உத்தியோகத்தர்கள்,
பாவனையாளர்கள் அலுவல்கள்,
அதிகாரசபை உத்தியோகத்தர்.

(5110)



# அச்சகத்துறையில்

## கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

கலர் பிறிண் 5/= முதல்

போட்டோக்கொப்பி இருபக்கம் 1.80 சதம்

## யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் 02[illegible]7030 (5843)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எது தகுதி?

ஓர் ஆட்சித் தலைவர் இருந்தார்.

அவருடைய தேசத்தில் மாநிலங்களை நிர்வாகம் செய்வதற்காக ஆளுநர்கள் இருந்தார்கள். ஒரு மாநிலத்தில் ஆளுநர் பதவி வெற்றிடமாக இருந்தது. அந்தப் பதவிக்கு இரண்டு பேரைப் பரிந்துரை செய்திருந்தார்கள்.

அவர்களிருவரில் ஒருவரைத் தேர்தெடுக்க வேண்டும். அதற்காக அவர்களைத் தன் வீட்டிற்கு வந்து சந்திக்குமாறு கட்சித் தலைவர் அழைத்திருந்தார்.

குறித்த நேரத்தில் ஒருவர் மட்டும் வந்து சேர்ந்தார். வணக்கம் சொல்லி அருகில் அமர்ந்தார். அன்பாகப் பேசினார்.

அவருடைய முகம் தெளிவாக இருந்தது. போட்டிருந்த உடையும் மிகவும் அழகாக, சுத்தமாக இருந்தது.

அளவுக்கு அதிகமாக எந்த வார்த்தையும் அவர் உபயோகப்படுத்தவில்லை. அவர் எல்லா வகையிலும் ஒரு நல்ல தலைவராக இருப்பதாக அந்த ஆட்சித் தலைவர் உணர்ந்தார். அவர்கள் இருவரும் சம்பாசித்துக் கொண்டிருந்தனர்.

இன்னொருவர் இன்னும் வந்து சேரவில்லை.

குறிப்பிட்ட நேரம் கடந்து விட்டது.

சிறிது நேரத்தில் அவசர அவசரமாக அவர் ஓடி வந்து சேர்ந்தார். வந்ததும் காலதாமதம் ஆனதற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்டுக்கொண்டே தன்னுடைய உடையில் படிந்திருந்த புழுதியைக் கையால் தட்டி சுத்தப்படுத்திக் கொண்டார். அதன் பின் சொன்னார்.

தலைவரே! தாமதமாக வந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் முன்னாடியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் வயதான அம்மா ஒருத்தரைப் பார்த்தேன். அவருடைய கழுதையின் கால்கள் இரண்டும் பாறைகளுக்கு நடுவில் மாட்டிக் கொண்டு இருந்தது. அதை வெளியே எடுப்பதற்கு அந்த அம்மா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

அதைப்பார்த்த பின்னரும் விட்டிட்டு வர முடியவில்லை. ஒரு வழியாக அதை மீட்டு அவர்களிடம் ஒப்படைத்து விட்டு வருவதற்குள் நேரமாகிவிட்டது என்றார்.

இவர் சொன்னதை ஆட்சித் தலைவர் புன்னகையுடன் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால், முதல் வந்து சேர்ந்தவர் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தார்.

அதன் பின் "உங்களுக்கு எது முக்கியம் ஆளுநரின் பதவியா? கழுதையின் காலா?" என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் ஆட்சித் தலைவரின் குழந்தைகள் ஓடி வந்து மடியில் உட்கார்ந்து விளையாட ஆரம்பித்தனர். அவர் அந்தக் குழந்தைகளுக்கு அன்பாக முத்தம் கொடுத்தார்.

இதைப் பார்த்ததும் அந்த முதல் நபர் சொன்னார்.

"ஐயா... எனக்குப் பத்துக் குழந்தைகள். இப்படியெல்லாம் அருகில் வரமாட்டார்கள். என்னைப் பார்த்தலே பயந்து ஒதுங்கிப் போய் விடுவார்கள்"

"அப்படியானால் அவர்களுக்கு முத்தமே கொடுத்தது இல்லையா?"

"இல்லை"

இப்பொழுது அந்த ஆட்சித் தலைவர்

"படைப்புக்கள் மீது கருணை காட்டாதவர் மீது படைப்பாளன் கருணை காட்டமாட்டான்" என்றார்.

அதற்கு "அந்த ஐந்து குழந்தைகள், வீட்டுக்குப் போனால் எல்லோரும் என் மேல் வந்து விழுந்து விளையாடுவார்கள். என் உடை கசங்கி இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்" என்றார்.

அழகான உடை, இனிமையான பேச்சு, பொலிவான தோற்றம். இதனால் மட்டும் ஒருவர் தலைவராகி விட முடியாது.

கருணை வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் வேண்டும்.

இந்தக் குணங்கள் தாமதமாக வந்த இரண்டாவது நபரிடம் இருப்பதை ஆட்சித் தலைவர் புரிந்து கொண்டார்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் அந்த ஆட்சித் தலைவர் தமது செயலாளரைக் கூப்பிட்டு "இந்த இரண்டாவது நபருக்குப் பதவி நியமனக் கடிதத்தை அனுப்பி வையுங்கள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெளிமாவட்ட வியாபாரிகளால் எமது வியாபாரம் பாழாகின்றது

## —யாழ்.வர்த்தகர்கள் முறையீடு—

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்ட வர்த்தகர்களின் பண்டிகைக் கால வருகையினால் குடும்ப செலவைக் கூட சீர்செய்ய முடியாத நிலைக்கு யாழ்.மாவட்ட வர்த்தகர்களாகிய நாம் தள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண வர்த்தக அமைச்சரிடம் முறையிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கும் யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.வணிகக் கழகத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட வர்த்தகர்களினால் அமைச்சரிடம் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் ஆகிய நாங்கள் தங்களிடம் சமர்ப்பிக்கும் பணிவான வேண்டுகோள் என்னவென்றால் தற்போது யாழ்.குடாநாட்டில் நடைபெறும் வர்த்தக தொழில் சம்பந்தமான புள்ளி விபரங்கள் யாவரும் அறிந்த விடயமாகும்.

வர்த்தகர்களாகிய நாம் எமது தொழிலை காலம் காலமாக நடத்திய போதிலும் தற்போது எமது தொழில் வரலாறு காணாத வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த காலங்களில் பல தடைகளையும் தாண்டி எமது தொழிலை நன்றே நாடத்தி வந்துள்ளோம்.

தற்போது இத்தொழிலால் எமது குடும்ப செலவைக்கூட சீர்செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

காரணம் வியாபார போட்டி, திறந்த பொருளாதார சந்தை, வெளிமாவட்ட வர்த்தகர்களின் பண்டிகைக்கால வருகை என்பன மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஒரு வியாபார ஸ்தாபனத்தை நடத்துவதற்கான முக்கிய செலவீனங்களான ஊழியர் சம்பளம், கடை வாடகை, மின்சாரக் கட்டணம், வியாபார வரி, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், விற்பனைவரி, வர்த்தக சந்தாபணம் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே தாங்கள் குடாநாட்டில் பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்கள் தவிர மேலதிகமாக பண்டிகைக்காலங்களில்வருகை தந்து எமது மக்களையும் ஏமாற்றி எமது வியாபாரத்தையும் பாதிப்பு அடையச் செய்யும் மேற்குறிப்பிட்ட வர்த்தகர்களின் வருகையை தடுத்து நிறுத்தி குடாநாட்டில் வாழும் வர்த்தக சமூகம் தலை நிமிர்ந்து வாழ தங்களாலான பணியை இம்முறை காலம் தாழ்த்தாது செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவர்கள் மேலும் வேண்டுகோள் விடுத்தனர். (அ-6)

# இலங்கை மீனவர்கள் 213 பேர் தடுப்பில்

இந்தியாவில் 213 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல்வளத் துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை மீனவர்களின் 40 படகுகளையும் இந்திய அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இலங்கை மீனவர்களின் விடுதலை தொடர்பிலும் இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையிலும் இந்திய மத்திய மீன்பிடித்துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த சில வாரங்களில் தான் இந்தியாவுக்குச் சென்று மீனவர்கள் விடுதலை உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேச்சுக்களை நடத்தவுள்ளதாக ராஜித சேனாரட்ன கூறினார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 50 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 15 | 40 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 - 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 190 | 120 |
| பாகற்காய் | 170 | 80 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 |
| பயற்றங்காய் | 60 | 80 | 100 |
| லீக்ஸ் | 60 | 60 | 100 |
| பீற்றூட் | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 160 |
| முருங்கைக்காய் | - | 200-300 | 240 |
| போஞ்சி | 100 | 90 | 80 |
| கத்தரி தம்புள்ள | - | - | 40 |
| கீரை - 1 பிடி | 15 - 30 | 40 | 35 |
| தேசிக்காய் | 50 - 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 50 | 35 - 45 |
| இராசவள்ளி | 160 | 120 | 160 |

# ஒளிவிழா

யாழ்.மாநகர சபையினரால் முன்னெடுக்கப்படும் ஒளிவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாநகரசபை வளாகத்தில் கொண்டாடப்படவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

இவ்விழாவின் போது ஒளிவிழா தொடர்பாக கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கான பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இராசி பலன்

*21.12.2013*
*(மார்கழி 6, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 11.02 மணிவரை*
*பூசம் முற்பகல் 8.59 மணிவரை*
*இராகுகாலம் 9.24 - 10.54 மணிவரை*
*சுபநேரம் 3.24 - 4.54 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்*

**மேடம்**

பிறர் மீது சந்தேகம் கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக நிலையுண்டு, வாகன சுகமுண்டு.

**இடபம்**

மனோ தைரியம் அதிகரிக்கும், இஷ்ட சித்தியுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், அந்நியர் சந்திப்புண்டு.

**மிதுனம்**

எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகக்குறைவான நாள், சிலர் கௌரவக்குறைவாக நடந்துகொள்ளலாம், விவாதங்கள் ஏற்படலாம்.

**கடகம்**

சயனசுகமுண்டு, சிந்தனை மிகுதியான நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்துகொள்வர், வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிங்கம்**

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், மனச்சோர்வுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கன்னி**

சயனசுகமுண்டு, எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**துலாம்**

எடுத்த காரியம் கைகூடும், தூர தேசத்திலிருந்து மகிழ்வான தகவல்கள் வந்து சேரலாம், பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**

எதிர்பாராத பயணங்களால் ஆதாயம் உண்டு, அஜீரணம் சம்பந்தமான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு**

உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள், வேலைச் சுமை கூடும், பிரயாண பயமுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்**

ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், களஸ்திர நன்மையுண்டு.

**கும்பம்**

விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்**

திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர்

## திருவருள்மிகு வியாவில் ஐயனார் தேவஸ்தானம்
## மகரஜோதிப் பெருவிழா- 22.12.2013

ஐயப்பன் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ விஜய வருடம் மார்கழித் திங்கள் 07ஆம் நாள் 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி முதல் ஹரிகர புத்திர ஐயப்ப பெருமானுக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

**கிரியா கால நிகழ்ச்சிகள்**

காலை 06.00 மணி ஐயப்ப சுவாமிக்கு விசேட அபிஷேகம்
காலை 08.00 மணி மகர ஜோதி பதினெட்டாம் படிப்பூஜை
காலை 10.00 மணி சரணகோஷம் பஜனை

தர்ம சாஸ்தா குருகுல அதிபர்
**ஸ்ரீ பிரம்மஸ்ரீ தாணுமகாதேவ சிவாச்சாரியார்**
(காயத்திரி பீடம், இணுவில்)

பிரதம குரு
**ஸ்ரீ விஷ்ணுஸ்ரீ க.ச. சோமாஸ்கந்த சிவாச்சாரியார்**
(வியாவில் ஐயனார் தேவஸ்தானம்)

பஜனை படிப்பூஜை
**ஸ்ரீ பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்**
(சபரிமலை குருசுவாமி. சிவதர்ம சாஸ்தா ஆலயம், உரும்பிராய்)

**ஆலய குரு : சு. ராஜித சர்மா, சு. சுஜிவ சர்மா**

## கருட புராணம் வெளியீட்டு விழா

22.12.2013 அன்று வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

**தலைவர்** : உயர்திரு ப. விக்னேஸ்வரன்
(உதவிச் செயலாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு)

**வரவேற்புரை** உயர்திரு க. சோமசேகரம் J.P
(அறங்காவலர், வியாவில் ஐயனார் தேவஸ்தானம்)

**நூலை வெளியிட்டு வைப்பவர்** : கல்விக் காருண்யன் உயர்திரு. E.S.P. நாகரத்தினம்

**முதற்பிரதி பெறுபவர்** : அறக்கொடைச் செம்மல் உயர்திரு எஸ். சிவஞானம்

இவ்விழாவில் விஷேட தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறும் குரு சுவாமிகளையும், மாலை அணியப்பெற்ற ஐயப்பன் சுவாமிமார்களையும் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து மகேஸ்வர பூஜையிலும் புங்கேற்று சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வியாவில், காரைநகர்.**

இங்ஙனம்
**ஆலய அறங்காவலர்**

விளம்பர அனுசரணை :
**கஜமுகன் ஹாட்வெயார்**
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 222 233
(C-5844)

## பாதீட்டை பார்வையிடுக

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அறிக்கை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட அறிக்கையை எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வரை, வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் பார்வையிட லாமென சபைத் தவிசாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

(அ-9)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு**
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com, valampuriijaffna@gmail.com

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா சின்னத்துரை



அல்வாய் வடக்கு ரவி இல்லத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சின்னத்துரை அவர்கள் 20.12.2013 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தமது இல்லத்தில் காலமானார்.

அன்னார் பொன்னு சின்னத்துரையின் அன்பு மனைவியும் சித்திரலேகா, இராஜேந்திரநாதன் (சுவிஸ்) அமரர் ரஞ்சிதலேகா, சந்திரலேகா, செல்வரதி, ரேணுகா, சுரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வல்லிக்குட்டி அன்னம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னு - இலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், பிள்ளையம்மா, கனகம்மா, முருகேசு மற்றும் சிவக்கொழுந்து, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னராஜா (ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர்), மதனாவதி (சுவிஸ்), நவநீதன், புஸ்பநாதன், வரோதயன், பிரபாகரன் (முகாமையாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 22.12.2013 ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'ரவி இல்லம்'
அல்வாய் வடக்கு.

(C-5845)

தகவல் :
குடும்பத்தினர்

edexcel

ISO 9001:2008 CERTIFIED
15 Years of Trust & Excellence in Higher Education



**G.C.E (O/L) இன் பின்னர்...**

**BSc (Hons)**
12 Months at Leading Universities in UK, USA, Australia,Canada etc...

| G.C.E (O/L) | IBP | HND Orientation | HND |
|---|---|---|---|
| | 3 Months<br>4 Certificates by BCAS<br>1 Certificate by Edexcel, UK<br>300 hrs - Full Time<br>4 Certificates for IT<br>1 Certificate for English | 1 Month | 16 Months / Full time<br>Computing<br>& Systems Development |

இலங்கையில் தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் முதற் தர நிறுவனமான BCAS Campus வழங்கும் IBP (Intensive Bridging Programme) எனும் பாடநெறியானது GCE O/L பரீட்சையினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான ஒரு அரிய வாய்ப்பாகும்.

O/L பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையிலான காலப்பகுதினைப் சிறப்பாக பயன்படுத்தி உங்களது கணனி, ஆங்கில தொடர்பாடல், ஆளுமை விருத்தி மற்றும் ஏனைய மென் திறன்களை (Soft Skills) வளர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த பயிற்சிகளை இப்பாட நெறி பெற்றுத்தருகிறது.

மூன்று மாத முழுநேர பாட நெறியாக வடிவமைக்கப்பட்டுள்ள (Over 300 Hour of intensive learning) இப் பாட நெறி முடிவில் BCAS campus வழங்கும் 4 சான்றிதழ்களும், Edexcel UK நிறுவனம் வழங்கும் 1 சான்றிதலும் கிடைக்கின்றது.

O/Level பரீட்சையின் பின் (A/L தகைமைகளின்றி) கணனித்துறையில் வெளிநாட்டு பட்டப்படிப்புகளை தொடர்வதற்கான அடிப்படைத் தகைமையாகவும் ( Degree Foundation Qualification) இப்பாட நெறி அமைகிறது.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

**Jaffna Campus :**
16, Point pedro Road, Jaffna, Sri Lanka.
Hotline : 021 2219910 | 077 710 2131
Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

**யாழ் மண்ணில்**

**A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்**

**BTEC HND in...**
> Computing & Systems Development
> Quantity Surveying
> Civil Engineering
> Business Management
> Biomedical Science
> Law
> Pshycology



Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)

மேலதிக விபரங்களுக்கு

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road,
Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk

Macro Ads
(C-5842)

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசுடன் அதிகார இழுபறியேற்படின் தமிழ்மக்களுக்கே பின்னடைவு ஏற்படும்

## வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

**மத்திய அரசுடன் அதிகார இழுபறி நிலை வருமாயின் அது பல்வேறு பின்னடைவுகளை எமது தமிழ் மக்களுக்கு கொண்டு வந்து விடும் என்றும் இந்திய விஜயத்தின் போது முக்கியமாக தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது எனவும் வடக்குமாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண சபையின் அமைச்சர்கள் இந்தியாவின் தமிழ் நாட்டுக்கு அடுத்த வருடமே விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்களுடனான கலந்துரையாடலையடுத்து யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து தடை செய்யப்பட்ட வலைகளையும் ரோலர் படகுகளையும் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவ னால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடியுள்ளேன். அத்தோடு முதலமைச்சரும் நானும் ஏனைய அமைச்சர்களும் உடனடியாக இந்தியாவிற்கு சென்று தமிழ் நாட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

கடல் மீன்பிடி என்பது மத்திய அரசின் கீழ் வருகின்ற விடயம். கடந்த வாரமளவில் பத்திரிகைகளில் மத்திய கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ண வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சருடன் தொடர்பை ஏற்படுத்தி கொண்டு பல்வேறு வழியில் மீனவர்களை அபிவிருத்தி பாதையில் முன்னேற்றிச் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்.

என்னைப் பொறுத்தவரை நிச்சயமாக முதலமைச்சருடைய அனுமதியுடன் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கு மத்திய அமைச்சர்களுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணியுள்ளேன். ஏன் என்றால் மத்திய அரசுடன் தொடர்பை ஏற்படுத்துவதில் தான் எமது தமிழ் மக்களின் அபிவிருத்தியும் எதிர்கால ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் தங்கியிருக்கின்றது.

அதிகார இழுபறி நிலை வருமாகவிருந்தால் அதாவது மத்திய அரசுடன் கலந்துரையாடமாட்டோம். இணைந்து செயற்பட மாட்டோம் என்கிற நிலைப்பாடு வருமாகயிருந்தால் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை அது கொண்டு வரும்.

எனவே அவர்கள் வடக்கு மாகாணத்துடன் பேச வேண்டும் என்று நல்லதொரு சமிக்ஞையைக் காட்டியிருக்கின்றார்கள். எனவே மீன்பிடி தொடர்பாக குறிப்பாக தென்பகுதி மற்றும் தென்னிந்திய மீனவர்களின் வருகையை நிறுத்த வேண்டும்.

இதற்கு பல சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இவற்றுக்கு அப்பால் அவர்களும் வந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். தென்னிலங்கை மீனவர்களின் வருகையை முற்றாக தடை செய்வது என்பது முடியாத காரியம்.

ஆனால் அது தொடர்பாக எமது மாகாண சபையூடாக பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்டு வர முடியும். இல்லையென்றால் எதிர்காலத்தில் எமது பகுதியில் தென்னிலங்கையிலிருந்து வருகின்ற அனைத்து மீனவர்களும் பருவகாலம் இல்லாத காலங்களில் எமது பகுதிக்குள் நுழைவார்களானால் எமது மீனவர்கள் எங்கு செல்வது என்ற கேள்வி எழுகின்றது.

எனவே எதிர்காலத்தில் ஒரு ஆக்க பூர்வமான கட்டுப்பாடுகளை வடக்கு மாகாண சபையின் ஊடாக எனது அமைச்சின் கீழ் வரு கின்ற விடயங்களுக்கு கொண்டு வரவுள்ளேன்.

தமிழ் மக்களை அவர்களின் துயரங்களிலிருந்து முதலில் ஆற்றுப் படுத்த வேண்டும். அதற்கு தென்னிந்திய மீனவர்களின் வருகையை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரும் சரியான ஒரு நிலைப்பாட்டில் தான் இருக்கின்றார். இந்திய அரசுடன் குறிப்பாக தமிழ் நாட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் முனைப்புடன் இருக்கின்றோம்.

எதிர்காலத்தில் சந்திப்பானது மத்திய அரசையும் சேர்த்துக் கொண்டு நகர்வதாகயிருக்க வேண்டும் என்பது என்து நோக்கம். எனவே இந்தியப் பயணம் தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எப்போது செல்வது என்பது தொடர்பாக இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

மேலும் எமது வடக்கு மாகாணத்தை கட்டியெழுப்பும் தார்மீகப் பொறுப்பு இந்தியாவிற்கு இருக்கின்றது. அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டி ற்கு இருக்கின்றது.

எனவே உறவுகளை பாதிக்காதவகையில் தென்னிந்திய மீனவர்களின் வருகையை தடை செய்ய வேண்டும். இந்த விடயங்களை அடுத்த வருடத்தில் இந்தியாவிற்கு பயணம் செய்யும் போதும் வலியுறுத்துவோம்.

இந்திய அரசாங்கத்துடனான சந்திப்பிற்கு முன்பு மத்திய அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரட்னவுடன் அடுத்த வருடம் தைமாதம் சந்திப்பு இடம்பெறும். இதற்குப் பின்பே மத்திய அமைச்சுடன் இணைந்து இந்தியாவிற்குச் சென்று மீனவர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடுவது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# நிரந்தர தீர்வு ஏற்படும் வரை புலம்பெயர் தமிழர்களை திருப்பி அனுப்பாதீர்கள்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

(கொழும்பு)

நிரந்தர தீர்வு ஏற்படும் வரை புலம்பெயர் தமிழர்களை தாயகத்திற்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுவிஸ் தூதரக அதிகாரிகளுடனான சந்திப்பில் வேண்டுகோள் விடுத்தார். முல்லைத்தீவில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பில் வட கிழக்கின் சமகால நிலை தொடர்பில் தூதரக அதிகாரிகளிடம் எடுத்து விளக்கிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் சுவிஸ் தூதரகத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் கலந்து கொண்டு ரவிகரனுடன் கலந்துரையாடியுள்ளனர். இதன் போது தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் தொடர்பில் அவர் அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நில அபகரிப்பின் இக்கட்டான சூழ்நிலை பற்றியும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் கலாசார இனப் பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கையால் தமிழ் மக்களின் வாழ்வியல் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது பற்றியும் எடுத்துக் கூறினார்.

இங்கு விவசாயம் ,கடற்றொழில் உள்ளிட்ட அனைத்து வாழ்வாதார நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் தொடர்வதில் உள்ள இடர்பாடுகள் தொடர்கிற நிலையில் தடுப்பிலிருந்து வந்தவர்கள் அடிக்கடி கண்காணிக்கப்படுவதாலும் விசாரணைக்கு உட்படுத்தப்படுத்தப் படுவதாலும் இளைஞர் சமூகம் பெரும் விரக்தி அடைந்துள்ளது.

இந்நிலையிலேயே தம் வாழ்வாதாரத்திற்காக தம் உயிரைக்கூட பொருட்படுத்தாமல் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு செல்கின்றனர்.

எனவே தாயகத்தில் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படாத நிலையில் புலம்பெயர் தமிழர் திருப்பி அனுப்பப்படுவது வருத்தமளிக்கிறது. இங்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரையில் எங்கள் உறவுகளை திருப்பி அனுப்ப வேண்டாமென சர்வதேசத்திடம் கோரிக்கை வைக்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| |
|---|
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 51.25 செவ் 2 இல்<br>உயரம்: 174 cm<br>தகைமை/தொழில்: A/L<br>(கனடா- PR)<br>தொ.இ: B/2658 |
| பிறப்பு: 1983 இந்து (India Tamil)<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 35 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: HNDA,<br>எலக்ரக்கல் இஞ்சினியர் (டுபாய்)<br>தொ.இ: B/2659 |
| பிறப்பு: 1981 இந்து (V-Sivi)<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 7<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / அரச உத்தியோகம் (UPS C II)<br>தொ.இ: B/2660 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 59.25 சூரி, செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineering/ பொறியியலாளர் (சிங்கப்பூர்.)<br>தொ.இ: B/2661 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| |
|---|
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 22.5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2679 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 33.75 செவ் 12 இல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: O/L / முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/2683 |
| பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 47 சூரி, செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: A/L/ கிராம அலுவலர்<br>தொ.இ: G/2687 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 9.75 சூரி, செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, படவரையுநர்<br>தொ.இ: G/2689 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுயிரினத் தொகுதியும் எங்களூர் விவசாயமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 39-I


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உயிரினப்பல்வகைமை [Biodiversity] தொகுதியொன்றில் பல்வேறுபட்ட உயிரினங்களும் அவற்றின் எண்ணிக்கையும் அவற்றுக்கிடையிலான தொடர்பும் முக்கியமானவையாகும். உயிரினத்தொகுதி சிறப்பாக இயங்குவதற்கு அதிலுள்ள உயிரினங்களின் இயக்கம் மிகமுக்கியமானதாகும். அதிலும் மண் உயிரினத்தொகுதி [Soil Biodiversity] என்னும் போது மண்ணினுள் நடைபெறும் அனைத்து நுண்ணங்கிகளினதும் ஏனைய உயிரினங்களினதும் இயக்கம் அனைத்தும் உள்ளடக்கப்படுகின்றன. மண்ணின் தன்மை பற்றி அதிகம் பேசிக்கொள்ளும் நாங்கள் மண்ணினுள் இருக்கும் உயிரினங்களைப்பற்றி அலட்டிக்கொள்வதில்லை. மண்ணிலுள்ள உயிரினங்களின் எண்ணிக்கையில் தளர்வு ஏற்பட்டாலோ அல்லது அந்த உயிரினங்கள் அழிக்கப்பட்டாலோ மண்ணின் உயிர்ப்பு அற்று அது இறந்து விட்டதாகவே கருதவேண்டும். இதற்கும் எமக்கும் என்ன தொடர்பு என எண்ணுகினறீர்களா?

வடபகுதியிலுள்ள விளைநிலத்தைப் பொறுத்தவரை வகைதொகையின்றி பயன்படுத்தப்பட்ட நச்சு இரசாயனப் பதார்த்தங்களால் எங்களின் மண் செத்து விட்டது என்பதாகும். எமது தேசத்தை இந்த மண்ணை அன்னைக்கு உவமானப்படுத்துவோம். மண்ணிலுள்ள வளத்தை சரிவர பயன்படுத்தாவிடில் இன்னும் ஒருபடி மேலே போய் மண்ணில் அதிகளவு இரசாயனத்தைப் பயன்படுத்தியதால் மண்ணிலுள்ள உயிரினங்களை அழித்து அதனால் மண்ணின் உயிர்ப்பினை இழக்க நாம் செய்திருக்கின்றோம். இது இயற்கைக்கெதிரான செயன்முறையாக இருப்பதனால் மண்ணின் வளத்தை நாம் பயன்படுத்த முடியாதிருக்கின்றது. உயிரின பல்வகைமையில் உள்ளடங்கும் அனைத்து வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இன்னும் அவற்றிற்கிடையிலான தாக்கங்கள் என்பன அந்த பல்வகைமையின் செழுமைக்கும் அது உள்ளடங்கிய சூழலுக்கும் பெறுமதியை கொடுக்க வல்லனவாகும். இயற்கையென்னும் போது மண்ணையும் மண்ணின்மேலுள்ள வளிமண்டலத்தையும் இணைத்துப்பார்க்கலாம். மாறாக நிலமேற்பகுதியை மட்டும் நாம் முக்கியமானதாக கருதக்கூடாது. இயற்கையென்பது நிலத்திற்கு மேலுள்ள பகுதியையும் நிலத்திற்கு கீழுள்ள பகுதியையும் இணைத்து கருதவேண்டும். இதனை தாவரத்தை உதாரணமாக கொண்டு அதனை ஒரு தொகுதியாக நாம் உருவகித்தால் மண்ணின் முக்கியத்துவத்தை இலகுவாக புரிந்து கொள்ளலாம். தாவரத்தின் தண்டு மற்றும் இலைப் பகுதிகளுடன் வேர்ப்பகுதியும் சேர் ந்தே ஒரு தொகுதியாகும். வேரின்றி தாவரத்தினால் எதுவும் செய்துவிடமுடியாது. அதனால் தான் நிலக்கீழ்ப்பகுதிக்கு நாம் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது.

பொதுவாகவே மண்ணிலுள்ள உயிரினங்களுக்கான முக்கியத்துவம் அதிகம் கொடுக்கப்படுவதில்லை. அதனால் மண்ணினுள் அசேதன இரசாயனப் பதார்த்தங்களை வாரியிறைத்து விடுகின்றோம். பசுமைப் புரட்சியின் விளைவுகளில் ஒன்றாக உருவாக்கப்பட்ட திருந்திய கலப்பினப்பயிர்கள் அசேதன பசளைகளையும் பீடைநாசினிகளையும் உள்வாங்கி சிறந்த விளைச்சலை கொடுக்கக்கூடியனவாகும். இவ்வாறான உள்ளீடுகளின்றி தற்போதுள்ள பயிர்வகைளிலிருந்து எந்தவிதமான விளைச்சலையும் பெறமுடியாது. அசேதன இரசாயன உள்ளீடுகளானவை பயிர்களின் தேவைக்கானதாக நிலத்தில் இடப்பட்டாலும் அவற்றின் பெறுமதி அந்த பயிர்களுக்கானதாக இருக்குமேயன்றி அதற்கும் மேலாக அவை நிலத்தில் செறிவாகும் போது மண்ணிலுள்ள உயிரினங்களுக்கு தீங்கானதாக மாறிவிடுகின்றன. இதனை பல ஆராய்ச்சிகள் தெளிவாக நிரூபித்திருக்கின்றன. எமது விளைநிலத்தில் இந்த பிரச்சினை பாரதூரமானதாகவே இருக்கின்றது. மண்ணின் வளத்தை மாற்றியமைக்கும் நிலைக்கு நாம் எமது பயிர்ச் செய்கையை மாற்றியமைத்திருக்கின்றோம். இதனால் எமது மண்ணின் வளத்திற்கு பங்கம் ஏற்பட்டுள்ளது. மண்ணிலுள்ள நன்மைதரும் நுண்ணங்கிகளின் அளவு கணிசமான அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மண்ணில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் மண்ணின் இயற்கைச் சமநிலையை பேண பெரிதும் உதவுவனவாகும். அவற்றை நாம் அழித்துவிட்டதால் சமநிலை குழம்பி தற்போது அதனைப் பேணமுடியாது தவிக்கின்ற நிலைக்கு ஆளாகியிருக்கின்றோம்.

இவ்வாறான பிரச்சினைகளை நாம் கவனத்திற்கெடுத்து மண்ணின் வளத்தைப் பாதுகாக்க பாடுபடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். இயற்கைவழி விவசாயம் எமக்கு பெரிதும் கைகொடுக்கும்.எனினும் எமது விவசாயப் பெருமக்களை இயற்கைவழி விவசாயத்திலீடுபட உள்வாங்குவது சுலபமான காரியமாக இருக்காது. விளை நிலத்தில் இருக்கின்ற பீடைப் பிரச்சினைகள் இயற்கைவழி விவசாய த்திற்கான முட்டுக் கட்டையாகவே இருக்கப் போகின்றது. ஆதலால் இவற்றை இயற்கை வழி மூலம் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கும் அதே நேரத்தில் மண்ணை பாதுகாக்கும் நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபடவேண்டும். நிலம் நலமாயன்றி வெள்ளாமை வீடுவந்து சேராது. மாசுற்றிருக்கும் நிலத்தை மீட்டெடுக்க அனைவரும் இணைந்து பலவழிகளிலும் பாடுபடவேண்டும்.



சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய போது

மண்ணின் தேவையறிந்து அவசியமுமறிந்து சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் முதன்முறையாக தேசிய மண்வளம் பற்றிய மாநாடு கடந்த வாரம் நடாத்தப்பட்டது. இதில் பல அறிஞர்களது கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அவற்றை ஏனைய அறிஞர்களுக்கும் தெரியப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய மாநாடு பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்களை இணைப்பதாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. முதன் முறையாக அமையப்பெற்றதால் அதில் பல்வேறுபட்ட மக்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டது நிறைவாக இருந்தது. மண் சார்ந்த பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் முக்கியமானதாக இருந்தது.

மேலும் மண்ணில் உள்ள நுண்ணங்கிகளின் வளத்தை முழுமையாகப் பயன்படுத்த நாம் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என நடைபெற்ற மாநாடு பரிந்துரைந்திருக்கின்றது.

இதற்காக நாம் என்ன செய்வேண்டும் என்பதனை இனங்கண்டிருக்கும் இம் மாநாடு அனைத்து ஆய்வாளர்களையும் இணைத்து தேசிய அளவில் பலமான திட்டத்தினை தீட்டுவ தற்கு வழிவகை செய்துமிருக்கின்றது. வரவிருக்கும் க.பொ.த உயர்தர மாணவர்கள் தொழில்நுட்ப பாட திட்டத்தினுள் முழுமையாக உள்வாங்கப்படும் போது அவர்களின் மூலமாகவும் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களுடன் மாநாடு முழுமைபெற்றிருக்கின்றது.

கற்றல் பாடத்திட்டத்தினுள் பலவகைகளில் உட்புகுத்தப்பட்டுள்ள உயிர்ப்பல்வகைமை கருத்து செயலளவில் உருப்பெற நாம் அனைவரும் இணைந்து இன்னும் பலமாக பாடுபடவேண்டும். வாருங்கள் இது எங்களுக்கான தருணம் வேண்டும்.

# தென்னிலங்கை வியாபாரிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை



தென்னிலங்கை வியாபாரிகளை தடை செய்வது என்பது முடியாத காரியம். ஆனால் மாகாண சபை மூலம் நியதிச் சட்டங்களை உருவாக்கி அவர்களை கட்டுப்படுத்த முடியும் என வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட வர்த்தகர்களுக்கும் வங்கி முகாமையாளர்களுக்கும் இடையிலான விசேட ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தின் போது தற்போது வர்த்தகர்கள் எதிர்நோக்கியுள்ள வங்கிக் கடன் மற்றும் ஏனைய வர்த்தக பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் யாழ்.வர்த்தகத்தை எவ்வாறு மீளக் கட்டி எழுப்புவது போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இக் கூட்டத்திற்கு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், யாழ்.மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம் மற்றும் அ.பரஞ்சோதி அயும் கலந்து வர்த்தகர்களோடும் வங்கி முகாமையாளர்களோடும் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எனது அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடுகள் என்பது மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டாலும் எமது வர்த்தகர்களை நிச்சயமாக ஏதோ ஒரு வழியில் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னேடுப்பேன். எதிர்காலத்தில் பல சர்வதேச மற்றும் உள்நாட்டு தொண்டு நிறுவனங்கள் வர்த்தக வாணிபத்திற்கு உதவ முன்வந்துள்ளது. உள்ளூர் உற்பத்திகளை சகல வர்த்தகர்களும் முன்னிலைப்படுத்த வேண்டும்.

அதனூடாக எமது மக்களிடம் பணப்புழக்கத்தினை மீண்டும் உருவாக்க முடியும். அத்தோடு தென்னிலங்கை வியாபாரிகளை தடை செய்வது என்பது முடியாத காரியம்.

அவர்களை கட்டுப்படுத்தும் வகையில் எமது மாகாண சபை மூலம் நியதிச் சட்டங்களை உருவாக்கி அவர்களை கட்டுப்படுத்த முடியும். எதிர்காலத்தில் உங்களது ஒத்துழைப்பிருந்தால் அதாவது ஒரு நிர்ணய விலையின் கீழ் சகல வர்த்தகர்களும் தங்களது பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் தென்னிலங்கை வியாபாரிகளின் வருகையை முற்றாக நிறுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குங்கள்

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வலியுறுத்து

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.போதனா வைத்தியசாலையில் நேர்மையுடனும் மிகவும் கஷ்டமான பொருளாதார சூழ்நிலையிலும் துன்பங்களை சுமந்து கொண்டு சேவையாற்றி வரும் தொண்டர்களை அரச நிர்வாக சுற்றிக்கைகளின் விதி முறைகளுக்கு அமைய சுகாதார பணியாளர் சேவைக்கு சமய /சமயாசமய/ ஒப்பந்த சலுகை அடிப்படையில் முதலில் உள்வாங்க வேண்டுமென அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்து மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.**

இவ்விடயம் தொடர்பில் அச் சங்கம் கடிதத்தின் பிரதிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

யாழ்.போதனா வைத்தியசாலையின் தொண்டர் சேவையில் புதியவர்களை கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை எமது தொழிற் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

இச் செயற்பாடு உடன் நிறுத்தப்படல் வேண்டும். அத்துடன் 2013. 10.26 ஆம் திகதி நேர்முகப் பரீட்சையும் இரத்து செய்யப்பட்டு சேவையிலிருக்கும் தொண்டர் பணியாளர்களை நிரந்தர சேவைக்குள் உள்வாங்கும் செயற்பாடு இடம்பெறல் வேண்டும். அவர்களுக்கு முறையான நியமனக் கடிதம் மேற்குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் வட மாகாணத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைமை அதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இவ்வூழியர்கள் இருப்பதால் மனிதாபிமான அடிப்படையிலும் தாபன விதி முறைமைகளுக்கு அமைவாகவும் இவர்களது பதவிக்குரிய அடிப்படை கல்வித் தகைமை அ.வர்த்தமானி 1229/17-2002.03.30 அமைவாக ஒன்பதாம் ஆண்டு (8 தரம்) சித்தியாக கருதப்பட்டு சுகாதார பணியாளர் சேவைக்குள் இவர்கள் உள்வாங்கப்படுவதற்கும் தாங்கள் உதவ வேண்டுமென்றும் குறித்த விடயங்கள் தொடர்பில் தாங்கள் நேர்மையான நடவடிக்கை எடுத்து உதவுவீர்கள் என்று நம்பிக்கையுடன் தொழிற் சங்கம் சார்பாக பாதிக்கப்பட்ட ஊழியர்களது நலன் கருதி மனிதாபிமான அடிப்படையில் தெரிவித்துக் கொள்கின்றோம் என அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கட்டுரை தொகுதிகள் வெளியீடு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் ந.மயூரனின் சொற்குறியம் மற்றும் த.அஜந்தகுமாரின் படைப்பின் கதவுகள் ஆகிய இரண்டுநூல்கள்நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

# ராஜபக்ஷவினரின் நிழலுக்கு மக்கள் பிரதிநிதிகள் அச்சம்

## அனுரகுமார எம்.பி.தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆளுகைக்கு உட்படுத்தியுள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு, செயற்குழு போன்றவற்றினால் எந்த பயனுமில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர்கள் கொலுபொம்மைகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள் பயமுறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

அரசாங்கத்தின் மக்கள் பிரதிநிதிகள் ராஜபக்ஷவினரின் நிழலைக் கண்டு அஞ்சும் நிலைமைக்கு தள்ளப்பட்டனர்.

எனினும் பிரதேச சபைகளில் ராஜபக்ஷவினரின் அராஜகத்திற்கு எதிராக சவால்கள் ஏற்பட்டு வருகின்றன. இது சிறந்த அடையாளம்.

அரசாங்கம் பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டங்களை நிறைவற்ற குண்டர் பலத்தையும் வன்முறை பலத்தையும் பயமுறுத்தலையும் அச்சுறுத்தல்களையும் பயன்படுத்தி வருகிறது.

இது ஜனநாயக ரீதியாகவும் மக்களின் வாக்குரிமை தொடர்பிலும் மிகவும் பாரதூரமான நிலைமையாகும். அரசாங்கத்தின் சார்பான குண்டர்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் இந்த செயற்பாடுகள் வன்முறை கலாசாரத்தின் தன்மையை காட்டுகிறது என்றார். (அ-2)

# பொது நிர்வாகத்துறை அரசியல் மயப்பட்டுள்ளது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொது நிர்வாகத்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்கள் கூட இன்று அரசியலில் ஈடுபடுகின்றனர். அரச சேவையில் நிலவி வரும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மொழி பெயர்ப்பாளர்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அரச நிர்வாகத்துறையை வலுப்படுத்த வேண்டுமாயின் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

அரச ஊழியர்களுக்கான வெற்றிடம் உரிய முறையில் நிரப்பப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)







கொக்குவில் இந்து முன்பள்ளி மாணவர்களின் வருட இறுதி கலைவிழாவும் மாணவர்களை வழியனுப்பும் நிகழ்வும் அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி செல்வராணி சகாதேவன் மாணவனொருவனைக் கௌரவிப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் நலன்புரிச்சங்கமும் இணைந்து நடத்தும் ஒளி விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிரியுரைகளை கரவெட்டிபுனிதஅந்தோனியார்ஆலய பங்குத் தந்தை எமில்போல் அடிகளார், உடுப்பிடி தென்னிந்திய திருச்சபை போதகர் எம்.பி.ஜெயநேசன், வை.எம்.சி.ஏயின் பருத்தித்துறை செயலாளர் டி.எம்.வேதாபரணம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (அ-9)

# போதைப் பொருளுக்கே ஹலால் சான்றிதழ் வழங்கும் நிலை

## பொதுபல சேனா கர்ஜிப்பு

(கொழும்பு)

போதைப் பொருட்களுக்கு ஹலால் சான்றிதழ் கொடுக்கும் நிலைக்கு நாட்டில் முஸ்லிம் தீவிரவாதம் பரவியுள்ளது.

இதைக் கவனத்தில் கொள்ளாத அரசாங்கம் தாமும் இணைந்து குற்றம் செய்கின்றனர் என பொதுபல சேனா பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுபலசேனாபௌத்த அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில்நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பொதுபல சேனா பௌத்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்று வரும் மோசமான செயற்பாடுகளுக்கும் குற்றச் செயல்களுக்கும் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். ஆனால் இலங்கையில் பலமானதொரு எதிர்க் கட்சி இல்லாமையும் இதற்கு முக்கிய காரணமாகும்.

மேலும் நாட்டில் போதைப்பொருட்களையும் ஏனைய குற்றச் செயல்களையும் முஸ்லிம் தீவிரவாதிகளே அதிகமாக செய்துவருகின்றனர்.

இன்று பௌத்த கொள்கைகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி முஸ்லிம் தீவிரவாதக் கொள்கைகளை நாட்டில் பரப்பவே பலர் முயற்சித்து வருகின்றனர்.

உணவுப் பொருட்கள் தொடக்கம் அனைத்து செயற்பாடுகளிலும் முஸ்லிம் கொள்கைகளே பரப்பப்பட்டு வருகின்றன.

போதைப் பொருட்களுக்கே ஹலால் சான்றிதழ் வழங்கும் நிலைக்கு இன்று நாடு மாற்றப்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கமோ இவை எவற்றையும் கருத்திற்கொள்ளாது தாமும் சேர்ந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருகின்றது.

பாராளுமன்றத்திலேயே இன்று பல கொள்ளைக்காரர்கள் இருக்கின்றனர். சர்வதேச போதைப் பொருள் கடத்தலோடு பல அமைச்சர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். இவை அனைத்தையும் ஜனாதிபதி உடனடியாக கட்டுப் படுத்தி நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வராவிட்டால் மோசமான பின் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# இளைஞர் கழக சம்மேளன விசேட பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் விசேட பொதுக் கூட்டமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள தேசிய இளைஞர் சேவை கள் மன்ற யாழ்.மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வெற்றிடமாகவுள்ள மாவட்ட சம்மேளன பதவிகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், அடுத்தாண்டிற்கான புதிய இளைஞர் கழகங்கள் அமைப்பது சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளதுடன், ஒவ்வொரு பிரதேச சம்மேளனங்களின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளது.

எனவே, இக் கூட்டத்திற்கு ஒவ்வொரு பிரதேச சம்மேளனங்களினதும் நிறைவேற்று சபை உறுப்பினர்கள், மாவட்ட சம்மேளனத்தின் உறுப்பினர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் , செனட் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு மாவட்ட இளைஞர் கழக சம்மேளன செயலரும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியுமான திருமதி வினோதினி ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார். (அ-9-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

673

## குருவி கொடுத்த விதை!

ஓர் ஊரில் பெரிய பண்ணையார் ஒருவர இருந்தார். அந்த ஊரில் இருந்த பெரும் பாலான நிலங்கள் அவருக்குத்தான் சொந்தம.

அவரிடம் முனியன் என்ற உழவன் வேலை பார்த்து வந்தான். அவனுக்குக் குடிசை ஒன்றும் சிறிதளவு நிலமும் இருந்தன.

பண்ணையாரிடம் வந்த அவன், " ஐயா! எல்லா நிலத்திலும் உழுது விதை நட்டு விட்டார்கள். என் நிலம்மட்டும்தான் வெறு மனே உள்ளது. நீங்கள் சிறிது தானியம் தாருங்கள். என் நிலத்திலும் விதைத்து விடுகி றேன்" என்றான்.

"என் நிலத்திலேயே உழுது பயிரிடு. சொந்தமாகப் பயிரிட வேண்டாம். பண்ணை யாராகும் ஆசையை விட்டு விடு. கூலியாளா கவே இரு. அரை வயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கும்" என்று கோபத்துடன் சொன்னார் அவர்.

சோகத்துடன் வீடு திரும்பினான் அவன். தன் மனைவியிடம், " நாம் வளம் பெறுவது பண்ணையாருக்குப் பிடிக்கவிலலை. தானி யம் தர மறுத்து விட்டார். நீயும் நம் குழந் தைகளும் எப்போதும் போலப் பட்டினி கிடக்க வேண்டியதுதான். இதுதான் நம் தலைவிதி" என்று வருத்தத்துடன் கூறினான்.

அவர்கள் குடிசையில் குருவி ஒன்று கூடு கட்டியது.

இதைப் பார்த்த அவன் மனைவி " நம் குடிசை புயலுக்கும் மழைக்கும் எப்பொழுது விழுமோ என்று நாம் அஞ்சுகிறோம். இங்கு வந்து குருவி கூடு கட்டுகிறது பாருங்கள்" என்று கணவனிடம் சொன்னாள்.

'பாவம்! வாய் பேச முடியாத உயிர் அது. நிலைமை புரிந்தவுடன் அதுவே இங்கிருந்து போய்விடும். நாம் அதற்குத் தொல்லை செய்ய வேண்டாம்" என்றான் அவன்.

கூட்டில் அந்தக் குருவி நான்கு முட்டை கள் இட்டது. நான்கும் குஞ்சுகளாயின.

திடீரென்று அந்தக் குருவிக் கூட்டுக்குள் ஒரு பாம்பு நுழைந்தது. குருவிக் குஞ்சு களைப் பிடித்துச் சாப்பிடத் தொடங்கியது. அவை அலறின.

அங்கு வந்த உழவன் பாம்பை அடித்துக் கொன்றான். அதற்குள் அது மூன்று குஞ்சு களைத் தின்று விட்டது. தரையில் விழுந்த ஒரு குஞ்சு மட்டும் உயிரோடு இருந்தது.

அதை அன்போடு எடுத்தான் அவன். அதன் கால் உடைந்திருப்பதைக் கண்டு அதற்குக் கட்டுப் போட்டான். அதை மீண்டும் கூட்டில் வைத்தான். வேளா வேளைக்கு உணவு தந்தான்.

சில நாட்களில் அந்தக் குருவியின் கால்கள் சரியாயின. அங்கிருந்து அது பறந்து சென்றது. உழவனும் குடும்பத்தினரும் வறுமையில் வாடினார்கள்.

"இப்படியே அரை வயிறு சாப்பிட்டு எவ் வளவு காலம் வாழ்வது? நமக்கு விடிவே கிடை யாதா?" என்றாள் மனைவி.

அப்பொழுது அவர்கள் வீட்டுக் கதவை யாரோ தட்டும ஓசை கேட்டது. கதவை திறந் தான் அவன்.

அவன் வளர்த்த குருவி வெளியே இருந் தது. அதன் வாயில் ஒரு விதை இருந்தது. அதை அவன் கையில் வைதத்து. "இதை உன் வீட்டுத் தோட்டத்தில் நடு. சிறிது நேரத்தில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பறந்தது அது.

மீண்டும் வந்தது அது. இன்னொரு விதையைத் தந்தது. "இதை உன் வீட்டின முன்புறத்தில் நடு" என்று சொல்லிவிட்டுப் பறந்தது.



மூன்றாம் முறையாக வந்த அது இன்னொரு விதை யைத்தந்தது" இதை ஜன்னல் ஓரம் நடு. என் மீது காட்டிய அன்பிற்கு நன்றி" என்று சொல்லிவிட்டுப் பறந்தது.

குருவி சொன்னபடியே மூன்று விதைகளையும் நட்டான் அவன்.

மறுநாள் காலையில் அங்கே மூன்று பெரிய பூசனிக காய்கள் காய்த்து இருந்தன. இதைப் பார்த்து வியப்பு அடைந்தான் அவன்.

தோட்டத்தில் இருந்த பூசனிக் காயை வீட்டிற்குள் கொண்டு வந்தான். அதை இரண்டு துண்டாக வெட்டி னான்.என்ன வியப்பு! அத னுள் இருந்து விதவிதமான உணவுப் பொருள்கள் வந் தன. சுவையான அவற்றை எல்லோரும் மகிழ்ச்சியாக உண்டனர். மீண்டும் அந்தப் பூசனிக் காயை ஒன்று சேர்த தனர். பழையபடி அது முழுப் பூசனிக்காய் ஆனது.

மகிழ்ச்சி அடைந்த அவன், "இது மந்திரப் பூசனிக்காய். நமக்கு உணவு தேவைப் படும்போது பிளந்தால் உணவு கிடைக்கும். மீண்டும் சேர த்துவிட்டால் பழையபடி ஆகிவிடும். இனி நமக்கு உணவுப் பஞ்சமே இல்லை" என்றான்.

"வீட்டின் முன் புறத்தில் ஒரு பூசனிக்காய் உள்ளது. அதைக் கொண்டு வாருங்கள். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்து விடலாம்" என்றாள் மனைவி.

அந்தப் பெரிய பூசனிக்காயை உருட்டிக் கொண்டு வந்தான் அவன். கத்தியால் அதை வெட்டினான். உள்ளிருந்து அழகான ஆடை கள், விலை உயர்ந்த மணிகள் கொட்டின.

ஜன்னலோரம் இருந்த மூன்றாவது பூசனிக் காயையும் கொண்டு வந்து வெட்டி னான். அதற்குள் இருந்து பொற்காசுகள் கொட்டின.

அதன்பிறகு அவனும் மனைவியும் குழந் தைகளும் நல்ல உணவு உண்டனர். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்தனர். மிகப் பெரிய வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கி னார்கள்.

உழவன் சில நாள்களில் பெருஞ்செல்வ னானதை அறிந்தார் பண்ணையார்.

அவனிடம் வந்த அவர்,"டேய்! முனியா! உனக்கு எங்கிருந்து இவ்வளவு செல்வம் கிடைத்தது? உண்மையைச் சொல்" என்று கேட்டார்.

அவனும் நடந்ததை எல்லாம் அப்படியே சொன்னான்.

தன் மாளிகைக்கு வந்தார் அவர். எப்படி யாவது மேலும் செல்வம் சேர்க்க வேண்டு மென்று நினைத்தார். வீட்டில் மேல் பகுதியில் குருவிக் கூடு ஒன்றை அவரே செய்தார். குருவி கள் அவரும் அதில் தங்கும் என்று எதிர் பார்த்தார்.

அவர் எண்ணம் ஈடேறியது. ஒரு குருவி வந்து அந்தக் கூட்டில் தங்கியது. நான்கு முட்டைகள் இட்டது. நான்கு குஞ்சுகள் வெளியே வந்தன.

"பாம்பு வரவே இல்லை. பொறுமை இழந்த அவர் ஒரு பெரிய கம்புடன் குருவிக் கூட்டை நெருங்கினார். மூன்று குஞ்சுகளை அடித்துக் கொன்றார். ஒன்றன் காலை உடைத்துக் கீழே எறிந்தார்.

பிறகு கால் உடைந்த குருவியிடம் அன்பு காட்டுவதுபோல் நடித்தார். வேளை தவறா மல் உணவு அளித்தார்.

கால் சரியான அந்தக் குருவி கூட்டை விட்டுப் பறந்து போனது.

"மூன்று விதைகளுடன் குருவி மீண்டும் வரும். அரசனைவிட செல்வன் ஆவேன்" என்ற எண்ணத்தில் காத்திருந்தார் அவர்.

அவர் எதிர்பார்த்தபடியே கதவைத் தட்டி யது குருவி. அவரிடம் மூன்று விதைகளைத் தந்தது. "ஒன்றை வீட்டின் பின்புறம் நடு. இரண்டாவதை வீட்டின் முன்புறம் நடு. மூன்றாவதைக் கிணற்றோரம் நடு" என்று சொல்லி விட்டுப் பறந்து சென்றது.

எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந தார் அவர். மூன்று தானியங்களையும் நட்டார்.

மறுநாளே மூன்று பெரிய பூசனிக் காய் கள் காய்த்து இருந்தன.

தோட்டத்தில் இருந்த பூசனிக் காயை வீட்டுக்குள் கொண்டு வந்தார். அதை வெட் டினார். அதற்குள் இருந்து எண்ணற்ற பூச்சி கள் வெளிவந்தன. அவர் வயலில் விளைந்தி ருந்த பயிர்களை எல்லாம் ஒரு நொடிக்குள் தின்றுவிட்டு மறைந்தன.

வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண் டார் அவர். முன்புறத்தில் இருந்த இரண்டா வது பூசனிக்காயை வெட்டினார்.

அதற்குள் இருந்து தீ வெளிப்பட்டது அது அவரையும் அந்த மாளிகையையும் ஒரு நொடிக்குள் சாம்பல் ஆக்கியது.

கொடிய பண்ணையார் ஒழிந்தார் என்று ஊர் மக்கள் மகிழ்ந்தனர்.

மூன்றாவது பூசனிக்காயை உடைக்க யாருமே முன்வரவில்லை. அதற்குள் பாம்பு, தேள், பூரான் போன்ற எண்ணற்றவை இருப்ப தாகப் பேசிக் கொண்டார்கள்.

## 21 12.2013 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1768-நேபாளம் ஒரு குடையின் கீழ் கொண்டு வரப்பட்டு இன்றுவரையுள்ள நாடு தோற்று விக்கப்பட்டது.
- 1902-இலங்கையில் போவர் போர்க் கைதிகளாக இருந்தவர்கள் தென்னாபிரிக்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.
- 1913-உலகின் முதலாவது குறுக்கெழுத்துப்போட்டி நியூயோர்க் வேர்ல்ட் பத்திரிகையில் வெளி யானது.
- 1967-உலகின் முதலாவது இருதயமாற்றுச் சிகிச்சை பெற்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த லூயிஸ் நாஷ்கான்ஸ்கி சிகிச்சை பெற்று 18 நாட் களின் பின்னர் இறந்தார்.
- 1968-சந்திரனுக்கான மனிதனை ஏற்றிச்சென்ற விண்கலம் அப்பலோ 8 புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது. புவியீர்ப்பைத் தாண்டிச் சென்ற முதலாவது மனித விண்கலம் இது வாகும்.
- 1971-ஐ.நா. அவையின் பொதுச் செயலாளராக கூர்ட் வால்ட்ஹெய்ம் தெரிவானார்.
- 1973-அரபு-இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்கான ஜெனீவா மாநாடு ஆரம்பமானது.
- 1979-ரொடீசியாவின் விடுதலைக்கான உடன்பாடு லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.
- 1991-கசகஸ்தானின் அல்மா-ஆட்டா நகரில் கூடிய பதினொரு சோவியத் குடியரசுகளின் தலைவர் கள் தனிநாடுகளின் பொதுநலவாய அமை ப்பு உருவாகியவுடன் சோவியத் ஒன்றியம் கலைக்கப்படும் என அறிவித்தனர். இதன் படி டிசம்பர் 26 ஆம் நாள் சோவியத் ஒன்றி யம் கலைக்கப்பட்டது.
- 1995-பெத்லகேம் நகரம் இஸ்ரேலியர்களிடம் இருந்து பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

### பிறப்புக்கள்

- 1942-ஹூசிங்தாவ், சீன மக்கள் குடியரசின் தலை வர்
- 1963-கோவிந்தா, இந்திய நடிகர்

### இறப்புக்கள்

- 2006-வரதர், ஈழத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளர் (பி.1924)
- 2008-கே.இந்திரகுமார், ஈழத்து எழுத்தாளர், நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமாய் வதைத்து... மௌனமாய் சீரழிக்கும்...?



ஆன்மீகம் 72



கேள்வி: சமீப காலங்களில் நம்மை பயமுறுத்தி வரும் மனநோய் பெருகி வரக் காரணமென்ன?

சத்குரு:- இரண்டாவது மருத்துவர் சொன்னார், என் பெரிய இரகசியம், மனச் சோர்வை மாற்றக் கூடிய மருந்துகளுக்கு நான் அடிமையாகி யிருக்கிறேன். என் நோயாளிகளைப் பார்ப்பதற்கு முன்னால் இரண்டு மூன்று மாத்திரைகளை போட்டுக் கொள்வேன்.

மூன்றாவது மருத்துவர் மிகவும் அமைதியாக உட்கார்ந்திருந்தார். மற்ற இருவரும் அவரை உலுக்கிக் கேட்டார்கள். நாங்கள் எல்லாம் ஆழ்ந்த இரகசியங்களை பகிர்ந்து கொண்டோம். இப்பொழுது நீங்கள் சொல்ல வேண்டும் என்று. அவர் என்னால் இரகசியங்களை காப்பாற்ற முடியாது. இந்த இரயில் நிற்கும் வரை என்னால் இப்பொழுது பொறுத்திருக்க முடியாது' என்று சொன்னார்.

அதனால் உங்களுக்கு என்ன சிக்கல் இருக்கிறதோ அது பதற்றமோ, அச்சமோ எதுவாகயிருந்தாலும் அதற்கேற்ப உங்களுக்கு ஒரு சிகிச்சையிருக்கிறது. அது என்ன சிகிச்சை? அந்த சூழ்நிலையை ஓரளவு கையாண்டு உங்கள் பைத்தியக்காரத்தனத்தை கையாளக்கூடிய அளவுக்குக் கொண்டு வருகிறார்கள். குணமாக்குவது இல்லை.

யாரும் உங்களை, பைத்தியக்காரத் தன்மை அற்ற நிலைக்குக் கொண்டு வருவதில்லை. எனவே, உங்களுக்குத் தரப்படுகின்ற சிகிச்சை என்பது தந்திரம் மட்டும்தான். இப்போது ஆன்மீகம் என்பது கையாளக்கூடிய பைத்தியக்காரத்தனத்தை நோக்கி நகர்வது அல்ல. குணமாகும் எல்லை வரை நீங்கள் பைத்தியமாகி, பைத்தியக்காரத்தனத்தின் எல்லைகளைக் கடந்து நீங்கள் குணமடைகிறீர்கள்.

எனவே, பைத்தியக்காரத்தனத்தோடு பிறந்தீர்கள். உங்கள் கர்ம வினைகள் பைத்தியக்காரத்தனத்தின் விளைவு தான். நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற பிணைப்புக்கள், குறுகிய எல்லைகள் அனைத்துமே இந்த பைத்தியக்காரத்தனத்தால் வந்தவைதான்.

ஒரு பைத்தியம், தான் இந்தத் தூணோடு பிணைக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், அவரைக் கட்டி வைப்பதற்கு சங்கிலியும் இல்லை. கயிறும் இல்லை. ஆனால், தான் பிணைக்கப்பட்டிருப்பதாக கருதுவார். அவர் அதைச் சுற்றிச் சுற்றிபோய்க் கொண்டிருப்பார்.

நீங்கள் என்ன சொன்னாலும் அவர் கேட்கமாட்டார். ஏனென்றால், அவர் பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருப்பார். இப்படித்தான் எல்லோரும் தங்களை ஏதாவது தூணோடு பிணைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். எனவே, அதுவும் ஒரு பைத்தியக்காரத்தனம்தான்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# "இங்கிருந்து"



பேராதனை பல்கலைக்கழகத்தில் ஆங்கில பாடத்திற்கான பேராசிரியரான திருமதி. சுமதி. சிவமோகன் இத் திரைப் படத்தை இயக்கியுள்ளார்.

## இலங்கையின், முகமிழந்த தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய ஒரு திரைப்படம்

புகழ்பெற்ற சிலோன் தேயிலையில் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு தேநீர்க் குவளைக் குப் பின்னரும், ஆண்டு முழுவதும் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் மிகக் கடுமையாக உழைக்கின்ற முகம்தெரியாத தொழிலாளிகள் உள்ளனர். இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர் சமூகம் தொடர்பாக *இங்கிருந்து* என்கின்ற திரைப்படத்தை சுமதி சிவமோகன் இயக்கியுள்ளார்.

இத்திரைப்படம் வெகுவிரைவில் கொழும்புத் திரையரங்குகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற இனப் பிரச்சினை தொடர்பான திரைப்படங்களுள் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் கதைகள் ஒருபோதும் உள்வாங்கப்படவில்லை என்கிறார் இயக்குநர் சுமதி.


தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானியாவால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட மலையகத் தமிழர்கள் அல்லது தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவின் திருநெல்வேலி, திருச்சி, மதுரை மற்றும் தஞ்சாவூர் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை தொடர்பில் இடம்பெற்ற அரசியற் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து குடியமர்த்தப்பட்டனர்.

வரலாற்று ரீதியாக மிகக்குறைந்தளவில் கவனம் செலுத்தப்படும் மலையக தமிழ்த் தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை வெளியில் கொண்டுவருவதைத் தூண்டும் முகமாக தற்போது "*இங்கிருந்து*" என்கின்ற திரைப்படத்தை இயக்குயுள்ளதாக சுமதி மேலும் குறிப்பிடுகிறார்.

மலையக தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் தொழில் ரீதியில் சுரண்டப்படுவது மட்டுமன்றி இவர்களுக்கான குடியுரிமை மற்றும் உடைமைகள் ஆகியன எவ்வாறு பறிக்கப்பட்டன என்பது தொடர்பாக சுமதி தனது திரைப்படத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இந்த மக்கள் இலங்கை அரசாலும் வெளிச்சக்திகளாலும் பல்வேறு அடக்குமுறைக்குள்ளாக்கப்படுகின்றனர். கருத்தியல் ரீதியான நோக்கில், இது ஒரு யுத்தம் மற்றும் சமாதானம் ஆகிய இரண்டும் கலந்த ஒரு திரைப்படமாகும்.

"நான் இந்த திரைப்படத்தை 3,4 பிரதான கதாபாத்திரங்களை மட்டும் மையப்படுத்தி எடுக்கவில்லை. நான் எனது தனிப்பட்ட கருத்துக்களை மட்டுமன்றி சமூகத்தின் பங்களிப்பையும் உள்வாங்கி இத்திரைப்படத்தை இயக்கியுள்ளேன். எனது பிரதான கதாபாத்திரமாக மலையக தோட்டத் தொழிலாளர் சமூகம் காணப்படுகிறது", என சுமதி தெரிவிக்கிறார்.

விரிவுரையாளரும், கவிஞரும், நாடக செயற்பாட்டாளருமான சுமதி இத்திரைப்படத்தை இயக்குவதற்கு முன்னர் மலையக தோட்டத் தொழிலாளர்களுடன் இணைந்து பணியாற்றியிருந்தார். இந்த மக்களுடன் இணைந்து பணியாற்றிய காலத்தில் இந்த மக்களின் உணர்வுகளை, வரலாற்றை இவர் நன்கு அறிந்தும், உணர்ந்துமுள்ளார். அதுமட்டுமல்லாமல் இத்திரைப்படத்தில் தோன்றியுள்ள கதாபாத்திரங்களும் மலையகத்தை சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.



"தமிழ்நாட்டில் முன்னால் முதலமைச்சரும் பிரபல நடிகருமான, மறைந்த எம்.ஜி.ராமசந்திரன் தொடர்பாக இத்திரைப்படத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர் கண்டியில் பிறந்ததால், இந்த மக்கள் இவரைப் போற்றுகிறார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், உண்மையில் மக்கள் எம்.ஜி.ஆரை மீளவும் நினைவுகூருகின்றனர். மலையக தோட்டங்களில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் எம்.ஜி.ஆர் கழகங்கள் மற்றும் அவரின் சிலைகள் என்பனவும் காணப்படுகின்றன" என சுமதி குறிப்பிடுகிறார்.

இந்த மக்களின் அடிப்படைக் காலசாரத் தொடர்புகள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவையாகும். மலையக சமூகத்தின் மத்தியில் நிலவும் ஆண், பெண் சமத்துவமின்மை, தொழில் சுரண்டல்கள் போன்றன மிக ஆழமாக இத்திரைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த மக்கள் இலங்கையின் குடியுரிமையை பெற்றுக்கொள்ள முடியாது வாழ்கின்றனர்.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்தியா மற்றும் தமிழ்நாடு போன்றன தமது பலமான கருத்துக்களை முன்வைக்கின்ற போதிலும், தென்னிந்தியாவுடன் மிகவும் பலமான தொடர்பைக்கொண்டுள்ள மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாக எவரும் தமது கருத்துக்களை முன்வைக்கவில்லை. இந்திய, இலங்கை உடன்படிக்கையால் மலையகத் தமிழர்கள் சிலர் நாட்டைவிட்டு வெளியேறவேண்டியேற்பட்டது. இது தொடர்பில் இத்திரைப்படத்தில் ஒரு தெளிவான தீர்வு அல்லது கருத்து முன்வைக்கப்படவில்லை. அது இலங்கையின் இன்றைய குழப்பமான அரசியல் சூழ்நிலையில் சாத்தியமானதுமல்ல.

"நான் இத்திரைப்படத்தில் எழுப்பியுள்ள எல்லாக் கேள்விகளுக்கும் இதில் பதில் கூறவேண்டுமென விரும்பவில்லை. எமது உண்மையான வாழ்வில் எமக்குள் உருவாகும் எல்லாக் கேள்விகளுக்கும் நாங்கள் பதிலைப்பெற்றுக் கொள்கிறோமா? இத்திரைப்படத்தைப் பார்க்கின்ற ஒவ்வொருவரும்மலையகதமிழர்களின்உண்மை நிலையைக் கண்டறிய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்" என்கிறார் இயக்குநர் சுமதி.

இந்தத்திரைப்படத்தை ஒளிப்பதிவு செய்வதற்கு 18 நாட்கள் எடுத்ததாகவும், ஆனால், தயாரிப்புப் பணிகளுக்கு மிக நீண்டநாட்கள் எடுத்ததாகவும் இவர் கூறுகிறார். இத்திரைப் படத்தை இயக்குவதற்கான 80 சதவீதமான பணம் தனது சொந்தப்பணமாகும். ஆனால், தனது நண்பர்களும் குடும்பத்தினரும் தனக்கு உதவிசெய்துள்ளதாகவும்அவர்குறிப்பிட்டுள்ளார்.

இத்திரைப்படத்தை இயக்குவதற்கு நிதி மட்டும் பிரச்சினையில்லை. இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள சில தோட்ட உரிமையாளர்கள் திரைப்படக்காட்சிகளை ஒளிப் பதிவு செய்வதற்கு அனுமதிக்கவில்லை. திரைப் படத்தில் வருகின்ற பெரும்பாலான காட்சிகள் மிகவும் இரகசியமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டவையாகும் என அவர் தெரிவிக்கிறார். இத்திரைப்படத்திற்கான வர்த்தகசார் வரவேற்பு எவ்வாறு இருக்கும் என அவரிடம் வினவியபோது, உண்மையில் இலங்கையில் வெளியிடப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு எந்தவொரு வர்த்தகசார் பெறுமதியும் கிடைக்கப்பெறாது என இயக்குநர் சுமதி யதார்த்தமாக பதிலளித்துள்ளார்.

-புதினப்பலகை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குள விவகாரம்; விவசாயிகள் கண்டனம்

(குருமன்காடு)

**கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய நீர்ப்பாசனக்குளமாகிய இரணைமடு குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடிநீர்த் தேவைக்காகத் தண்ணீரைக் கொண்டு செல்கின்ற பல மில்லியன் ரூபா செலவிலான திட்டமானது பல வழிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்று விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.**

இந்தத் திட்டத்தில் காணப்படுகின்ற கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்குப் பாதகமான பல விடயங்கள் குறித்து வட மாகாண சபை கவனத்தில் கொள்ளவில்லை என்று கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளத் தலைவர் செ.சிவப்பிரகாசம் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இந்தத் திட்டம் பற்றி கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு என்ன சொல்லப்போகின்றோம், இந்தத் திட்டத்தில் நாங்கள் உங்களுக்கு உறுதியாக இருப்போம். இதனை நாங்கள் ஏற்கவில்லை. இதனை உடனடியாக நிறுத்துவோம் என்று மாகாண சபையில் இருந்து எங்களுக்கு இன்றுவரையில் எந்த பதிலும் வரவில்லை. மாறாக, இரணைமடு குளத்தில் இருந்து தண்ணீரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு போக வேண்டும் என்று தீர்மானம் எடுத்திருக்கின்றார்கள்.

ஆகவே, எங்களுக்கு மாகாண சபையோ அரசியல்வாதிகளோ எவரும் எங்களுக்குத் தேவையில்லை. அவர்களை நாங்கள் நம்பவில்லை. நம்பக் கூடிய வகையில் அவர்கள் நடந்துகொள்ளவில்லை. இறுதியாக, உறுதியாக, தெட்டத்தெளிவாக நாங்கள் எங்களுடைய தீர்மானத்தை முன்னெடுப்போம்.

இந்தத் திட்டத்தை எங்களால் நிறுத்த முடியும். அதை நாங்கள் செய்து காட்டுவோம். இதுதான் எங்களுடைய கருத்து, முடிவு என்று கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் செ.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட பெரியபரந்தன் விவசாய அமைப்பின் தலைவர் யோகநாதன், இரணைமடு குளத்தின் தண்ணீரானது கிளிநொச்சி மாவட்டத்து மக்களுக்கே காணாமல் இருக்கும்போது இங்கிருந்து தண்ணீரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்ல முயற்சிப்பது பொருத்தமற்ற செயலாகவே நாங்கள் கருதுகின்றோம் என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவான காணிகளுக்கு இந்தக் குளத்தில் இருந்து நீர் வழங்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. ஆகவே இந்தக் குளத்தை அபிவிருத்தி செய்து அதிக நீரைப் பெற்று அதனை இந்த காணிகளுக்கு வழங்க வேண்டும். எங்களுடைய விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் காணாமல் உள்ள நிலையில் யாழ்ப்பாணத்திற்கு இங்கிருந்து தண்ணீர் கொண்டு செல்வதை நாங்கள் விரும்பவில்லை என்றும் யோகநாதன் செய்தியாளர்களிடம் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நிலைப்பாடு குறித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இராமநாதபுரம் விவசாய அமைப்புத் தலைவர் சிவமோகன், 22 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு இப்போது நீர் வழங்கப்படுகின்றது. இன்னும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாய நிலத்திற்கு இந்தக் குளத்தில் இருந்து நீர் வழங்கப்பட வேண்டிய தேவை இருந்தும் நீர் வழங்கப்படாமல் இருக்கின்றது. இந்த நிலையில் இங்கிருந்து தண்ணீரை எவ்வாறு வெளியில் கொண்டு செல்ல முடியும் என்று வினா எழுப்பினார்.

இரணைமடு குளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. இதனை அபிவிருத்தி செய்யுங்கள். அதில் அதிக நீரைச் சேமிப்பதற்கும் அதன் மூலம் எங்களுடைய விவசாய நிலங்கள் பயனடைய வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். இந்த அபிவிருத்திக்கென வருகின்ற பணத்தை வேண்டாம் திரும்பிப் போகட்டும் என்று நாங்கள் ஒருபோதும் கூறவில்லை என்றும் சிவமோகன் கூறினார்.

இரணைமடு குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்கின்ற 21 விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் இந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-250)

## கோவில் புளியங்குளத்தில் சடலம் மீட்பு

(பூந்தோட்டம்)

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில்புளியங்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை ஆணொருவரின் சடலத்தினை மடு பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா கல்மடு கிராமத்தை சேர்ந்த சண்முகம் தியாகராசா வயது 54 என்ற குடும்பத்தரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம் மரணம் தொடர்பான விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250-266)




## சுனாமி பேரனர்த்த நினைவேந்தல் நிகழ்வு

(முல்லைத்தீவு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சுனாமி பேரனர்த்த நினைவேந்தல் நிகழ்வு இவ் வருடமும் இடம்பெறவுள்ளது.

சுனாமி பேரலை தாக்கத்தினால் உயிரிழந்த எமது உறவுகளுக்கு அஞ்சலித்து வணக்கம் செலுத்தும் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஒவ்வொரு மாவட்டரீதியாக இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணியளவில் மட்டக்களப்பு நாவலடிப் பகுதியில் இவ் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணியளவில் முல்லைத்தீவு நினைவாலயப் பகுதியிலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## மரப்பட்டறை நடத்திய ஆறு பேருக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதவாளன்சிங்கம் குளம், பூதன்வயல் பிரதேச காட்டுப்பகுதிக்குள் சட்டவிரோதமாக மரப்பட்டறையொன்றை நடத்திவந்ததாகக் கூறப்படும் ஆறு பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி விளக்கமறியலல் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.


மிக நீண்ட காலமாக முள்ளியவளை மதவாளசிங்கம் குளம் பூதன்வயல் பிரதேச காட்டு பகுதிக்குள் குறித்த சந்தேக நபர்கள் நீண்ட நாட்களாக இந்த சட்டவிரோத மரப் பட்டறையை நடத்தி வந்துள்ளனர்.

எனினும், விசேட அதிரடிப்படையினரால் கடந்த திங்கட்கிழமை குறித்த பிரதேசம் முற்றுகையிடப்பட்டு சந்தேக நபர்கள் உரிமையாளர் ஆறு பேர் கைது செய்யப்பட்டு முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன் குறித்த மரப்பட்டறையில் இருந்த சுமார் இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் கூடுதலான முதிரை மற்றும் பாலை மரத்துண்டுகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட ஆறு பேரும் நீதிமன்றத்தில ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அந்த ஆறு பேரையும் இம் மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (ம-250)



பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பூநகரி பிரதேச செயலகத்தின் வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருவதையும் தொழிலாளர் இராப்பகல் பாராமல் வேலை செய்து வருகிறார்கள். இக்கட்டடத்துக்கு அருகாமையிலேயே பூநகரி பிரதேச சபை கால்நடை வைத்தியர் அலுவலகம், பூநகரி தபாற்கந்தோர், பொது நூலகம், சமநலசேவை நிலையம், ஆயுர்வேத வைத்தியசாலை, சமுர்த்தி அலுவலகம் ஆகிய பிரதான அலுவலகங்கள் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

(படம்:- பூநகரி செய்தியாளர்)

## உதவும் நெஞ்சங்கள் கனகராயன்குளம் நற்பணிமன்றம் உதயம்

உதவும் நெஞ்சங்கள் கனகராயன்குளம் என்ற நற்பணிமன்றம் ஒன்றை கடந்த 18 ஆம திகதி தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் துஸ்யந்தன் கனகராயன்குளத்தில் ஆரம்பித்து வைத்த நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது.

"உதவும் நெஞ்சங்கள் கனகராயன்குளம்" என்ற நற்பணிமன்றத்தின் தலைவராக சி.சியாந்தன், செயலாளராக யோ.நிதர்சன், உபதலைவராக ஆ.சசிநாத், உபசெயலாளராக அனோசன், பொருளாளராக சி.நிலக்சன், ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர்களாக கஜீவன், அருந்தவன், தவநீதன், மிதுர்சன், சதீஸ்குமார், சுதர்சன், சுஜிதன், தர்சன், சிறி காந், தனுசன், பார்த்தீபன், கன்ஸ்ரன் மற்றும தர்சன ஆகியோரும் தெரிவு செய் யப்பட்டனர்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவிக்கும்போது தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் துஸ்யந்தன் தெரிவித்ததாவது, நாங்கள் 1999ஆம் ஆண்டு தொடக்கம் 2003 காலப் பகுதிவரை சமூகப் பொருளாதார நிறுவனம் என்ற நிறுவனத்தை உருவாக்கி வடக்கு கிழக்கு உட்பட பல பாரிய செயற்றிட்டங்களையும் வறிய மக்களுக்கு பலதரப்பட்ட உதவிகளை செய்துவந்தோம். மீண்டும் 2003 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் ஈரோஸ் அமைப்பு மூலமாகவும் சுயமாகவும் குறிப்பாக வன்னிப்பகுதியில் பாடசாலை மாணவருக்கான உதவிகள் வறிய மக்களுக்கான உதவிகள் எனவும் அரசியல் ரீதியாகவும் மக்களுக்காக இன்றுவரை சேவையாற்றி வருகின்றோம்.

மேலும் எமது சேவை வலுப்படுத்துமுகமாக "உதவும் நெஞ்சங்கள் கனகராயன்குளம்" என்ற நற்பணிமன்றத்தை ஆரம்பித்து வறிய மாணவர்களின் கல்வியையும் வறிய மக்களின் பொருளாதாரத்தையும் மேலுயர்த்துவதே எமது முக்கிய குறிக்கோளாகும் எனக் குறிப்பிட்டார். (ம-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபையின் வரவு செலவு கூட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் தலைவர் சண்முகம் சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

இதனையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கு எதிராக அளிக்கப்பட்ட 5 வாக்குகளில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் வாக்கும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் சபையை விட்டு வெளிநடப்பும் செய்திருந்தார்.

இருப்பினும் மூன்று மேலதிக வாக்குகளுடன் மானிப்பாய் பிர தேச சபையின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (அ-6)

# நீதி நியாயம் பேசும் மன்னார் ஆயர் மீது புலிச்சாயம் பூசாதீர்கள் - சிறிதரன் எம்.பி.



(கொழும்பு)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தடை செய்வதன் மூலம் இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு விடுமா என்று பாராளுமன்றில் கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் மன்னார் ஆயருக்கு புலிச்சாயம் பூசுவதை நிறுத்துங்கள் என்றும் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.**

பாராளுமன்றில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றல்படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு-கிழக்கில் வாழும் எங்கள் சொந்தங்கள் காணிகளுக்கான உறுதிப்பத்திரம் இல்லாமல் அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பிரச்சினைகளுக்கு யுத்தத்தை காரணங்காட்டி அரசாங்கம் தீர்வை முன்வைக்கவில்லை. தற்போது யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்து விட்ட போதிலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படவில்லை.

தமிழர்கள் ஒரு தேசமாகவும் சிங்களவர்கள் ஒரு தேசமாகவும் வாழ்ந்த நாடு இது.

ஆனால், தமிழர்கள் இன்று தமது தேசியத்தை இழந்த நிலையில் வாழ்கின்றனர்.

எனவே, தமிழ் இனம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அவர்களின் இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதேவேளை இவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்பு ஆண்டகைக்கு புலிச்சாயம் பூசுகின்றனர். தான் மதகுருவே தவிர போராட்டம் நடத்தியவர்களுடன் சம்பந்தப்பட்டவர் அல்லர் என்று ஆயரே கூறியுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை நேரில் கண்டவர் என்ற அடிப்படையில் மனிதநேயத்துடன் அவர் செயற்படுகின்றார்.

யாராவது நீதி நியாயத்தைக் கதைத்தால் இங்கு புலிச்சாயம் பூசப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார். கூட்டமைப்பை தடை செய்வதால் இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிடுமா? முதலில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வையுங்கள்.

குறிப்பாக தற்போது யுத்தகால இழப்புகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு நடவடிக்கைக்கு வழங்கப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை படைத்தரப்பால் கொல்லப்பட்டவர்கள் குறித்து நிரப்புவதற்கான பகுதி இல்லை. விமானத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே, இந்தப் படிவத்தை நீக்கிவிட்டு பதிவு நடவடிக்கையை நிறுத்திவிட்டு சகல விபரங்களையும் உள்ளடக்கிய வடிவத்தின் மூலம் புள்ளி விபரங்களைப் பெறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



தேசத்தின் நிழல் 2013 மர நாட்டு விழா கரணவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்றபோது...

## 800 வருட பழைமையான தங்க கிரீடம் தமிழ் பாரம்பரியத்தை கொண்டது

(கொழும்பு)

வத்தளை பிரதேசத்தில் அண்மையில் கைப்பற்றப்பட்ட 800 வருடங்கள் பழைமையான மாணிக்க கற்கள் பதிக்கப்பட்ட கலசம் தமிழ் பாரம்பரியத்தை கொண்ட தொல்பொருளாக இலங்கை தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் செனரத் பண்டார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் அது தொல்பொருளா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அதேவேளை தொல்பொருள் எனக் கூறப்படும் இந்த பெறுமதிமிக்க கலசம் துட்டகைமுனு மன்னனின் கிரீடம் அல்ல எனவும் அது தலையில் அணியக் கூடியதாக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இது குறித்து தொல்பொருள் திணைக்கள பொலிஸாரும், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என திஸாநாயக்க கூறினார்.

35 மாணிக்க கற்கள் பதிக்கப்பட்ட தங்கத்தினாலான கிரீடம் எனக் கூறப்படும் இந்த கலசத்தை 35 கோடி ரூபாவிற்கு ஜப்பான் பிரஜை ஒருவருக்கு விற்பனை செய்ய முயன்ற போது பொலிஸார் அதனை கைப்பற்றினர்.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவ மேஜர் ஒருவரும், வர்த்தகரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## தந்திரமாக நகை அபகரிப்பு; வயோதிப பெண் அந்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

இரத்தப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்த வயோதிபப் பெண்ணொருவரின் தங்க நகைகளை வைத்தியசாலை ஊழியர்ரென தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர் அபகரித்துச் சென்றுள்ளார்.

தீவுப் பகுதியிலிருந்து வந்த வயோதிபப் பெண்ணொருவரின் 6 புவுண் தங்க நகைகளே இவ்வாறு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் காலை இரத்தப் பரிசோதனைக்காக மேற்படி வயோதிபப் பெண் வந்துள்ளார். இந்நிலையில் மேற்படி வயோதிபப் பெண் இரத்த பரிசோதனை செய்வதற்கு செல்லத் தயாரான போது அவரின் தங்கநகைகளை தான் வைத்திருப்பதாக கூறியநபர் தன்னை வைத்தியசாலை ஊழியரெனவும் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இதனை நம்பி தனது தங்க நகைகளைக் கொடுத்துவிட்டு இரத்தப் பரிசோதனை செய்துவிட்டு திரும் பிவந்த வயோதிபப் பெண், அந்த நபரைக் காணாது திகைத்து நின்றார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி வயோதிபப் பெண்ணின் தங்க நகைகளை குறித்த நபர் அபகரித்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-4)

# பிரித்தானிய எம்.பிக்களை விலைக்கு வாங்கவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு ஆதரவை பெறுவதற்காக சில பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியதாக சுமத்தபபடும் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உரையாற்றுகையில்,

நாட்டின் உண்மையான கள நிலைமைகளை கண்டறிய சில பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் இலங்கைக்கு வருகை தந்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்துவதுபோல் அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் அழைத்து வரவில்லை. வழக்கமாக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள பிரித்தானியாவுக்கு சுற்றுலா பயணம் செல்வது போல் அவர்கள் இங்கு வந்துள்ளனர்.

பிரித்தானியாவின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி உட்பட பிரித்தானிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

அத்துடன் அவர்களின் பெயர் விபரங்களையும் அவர் வெளியிட்டிருந்தார்.

அதேவேளை பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெற்ற போது இஸ்ரேலில் இருந்து இரகசியமான முக்கிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகைதந்ததாகவும் மங்கள சமரவீர தகவல் வெளியிட்டிருந்தார்.

இஸ்ரேல் பிரதிநிதிகள் இலங்கை வந்த தனியார் விமானம் பற்றிய தகவல்களை வெளியிட்ட மங்கள எதற்காக இஸ்ரேல் பிரதிநிதிகள் இலங்கை வந்தனர் எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பீரிஸ், இஸ்ரேல் பிரதிநிதிகள் பொதுநலவாய நாடுகளின் வர்த்தக பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்ததாக தெரிவித்தார்.

இந்த பிரச்சினை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சபையை தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் விமர்சித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்திற்கான ஆறு!

## யாழ். நீர்த்தேவைக்கான நிரந்தரத் தீர்வை நோக்கி..

**இலங்கையின் முன்னாள் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய மறைந்த, எந்திரி எஸ். ஆறுமுகத்தின்- 1954 இல், முதன் முறையாக வெளியிடப்பட்ட- யாழ்ப்பாணத்தின் நீர்ப்பிரச்சினையைக் களைவதற்கான முக்கிய விடயங்கள் கொண்ட, தூரநோக்கிலான சிந்தனையை வெளிப்படுத்தும் கட்டுரை, யாழ்.குடாநாட்டின் நீர்த் தேவைகள் சார்ந்த பிரச்சினைகள் மேற்கிளம்பியுள்ள தற்போதைய சூழலில், கவனத்திற்கொள்ளப்படுவதற்காக இங்கே...**

யாழ்.குடாநாடானது மிகவும் குறைந்தளவான 30 அங்குல மழை வீழ்ச்சியினைப் பெறுகின்ற அதேவேளை, வடமாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் 60 அங்குலத்திற்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.

குடாநாட்டின் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கு ஏனைய பகுதிகளிலிருந்து பெறப்படும், செல்வமாகிய மேலாதிக மழை நீரை, இப்பகுதிக்கு பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு நியாயபூர்வமான விருப்பமாகும்.

1930 களில்- குடாநாட்டில் பரந்திருந்த உவர் நீர் ஏரிகளை பயன்படுத்தும் முகமாக அவற்றை நன்னீராக்க வேண்டும் என்ற கருத்தை காலஞ்சென்ற சட்டவாக்க சபை உறுப்பினரான மு.பாலஸிங்கம் அவர்கள் தனது மனதில் உருவாக்கினார்.

மாமன்னர் பராக்கிரம பாகுவின் சிந்தனையின் ரூபமான- மிகவும் பரவலாகப் பேசப்பட்ட கருத்தானது, *வானத்திலிருந்து விழும் ஒரு மழைத்துளியும் ம னுக்கு பயன்படாமல் கடலை சென்றடைய விடக்கூடாது* என்ற சித்தாந்தமே, மதிப்புக்குரிய மு.பாலசிங்கம் அவர்களதும் கருத்தாகும்.

இந்தச் சிந்தனையே வடமாகாணத்தின் முக்கிய ஆதாரமான கனகராயன் ஆற்றின் வெள்ள நீரை முற்று முழுதாக பயன்படுத்துவது என்ற எண்ணக்கரு உருவாக வழி கோலியது. இந்த ஆறு வவுனியாவில் உருவாகி, புளியங்குளம், மாங் குளம் ஊடாக இரணைமடுக் குளத்தை நிரப்பு கின்றது. இதன் மேலதிக நீர் ஆனையிறவு ஏரியை அடைகின்றது. இது, ஆனையிறவுப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கடலுடன் இம்மேலதிக நீரானது, இப்பாலத்தினூடாக வீணே பெருங்கடலைச் சென்றடைகிறது.

1949 மாசியில் ஓர் நாளில் இத் தெருவின் ஊடாக சுற்றுலாவிற்குச் சென்ற ஆறுமுகம் குடும்பத்தினர், ஆனையிறவு பாலத்தின் அண்மையில் நண்பகல் உணவிற்காக இளைப்பாறினர். அவரின் சிறிய மகன் இவ்வேரியில் கை கழுவும் பொழுது ஏரியின் மேற்குப் பகுதி கடலுடன் தொடர்புடையதாக இருந்தாலும், கிழக்குப் பகுதியில் நன்னீர், இருப்பது எவ்வாறு ஏன்று கேட்ட வினாவிற்கு அன்பான தந்தை அதன் காரணத்தை விளக்கினார்.

அந்தச் சிறுவன் உடனடியாக, *நாங்கள் கொஞ்ச மண்ணை காரில் கொண்டு வந்து இந்தப் பாலத்தை நிரப்புவோம், இதனால் நன்னீர் ஏரி உருவாகும்* என்று பதிலளித்தான்.

அந்த வருடம் கனகராயன் ஆற்றில் வெள்ளம் பாய்ந்தது. இரணைமடுக்குளம் நிரம்பி வான் பாய்ந்தது. மேலதிக நீர் தெருவின் கிழக்கிலுள்ள ஆனையிறவு ஏரியை நிரப்பியது.

இரணைமடுக்குளம் தை மாதத்தில் வான் பாயவிடப்பட்டாலும் மாசிமாதத்தில் கூட கிழக்கு ஏரி, நன்னீராகவே காணப்பட்டது. எனினும் இப்பாலத்தினை மண் கொண்டு வந்து நிரப்பினாலொழிய, இந்நீர் பாலத்தினூடாக கலக்கும் கடல்நீரால் விரைவாக உவர்நீராக மாறிவிடும்.

ஆனையிறவு ஏரியை நன்னீராக்கும் திட்டத்தின் அடிப்படையானது, கிழக்கு ஏரி வருடம் முழுவதும் நன்னீராகவே இருக்க வேண்டும்...

ஆனையிறவு ஏரி, ஆனையிறவு தொடக்கம், சுண்டிக்குளம் வரையுள்ள சுமார் 11,400 ஏக்கர் பரப்பை கொண்டது. இவ்வேரி கனகராயன் ஆறு, நெத்தலியாறு, பிரமந்தனாறு, தேராவிலாறு மற்றும் சிற்றாறுகளிலிருந்து வரும் நிரைப் பெறுகின்றது. இதன் வடக்கே வானைக் குளமும் தெற்கே கரைச்சி காணிகளையும் கொண்டுள்ளது. பாலத்திற்கு அருகில் ஓர் தடுப்பை ஏற்படுத்தி சுண்டிக்குளத்திற்கு அண்மையில் பொருத்தமான வான்கட்டை அமைப்பதனூடாக இவ்வேரிக்குள் உட்புகும் நன்னீரானது ஆனையிறவு நன்னீர் தேக்கமாக உருவாகும்.

முள்ளியான் பகுதியினூடாக வடக்கில் அமைந்த வாய்க்கால்கள் இந்நீர் தேக்கத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஏரியாகிய வடமராட்சியைத் தொடும்.

நீண்ட நீர்ப்பரப்பை உடைய வடமாரட்சி ஏரியானது பச்சிலைப்பள்ளியில் அமைந்த முள்ளியானில் இருந்து செம்பியன்பற்று, எழுதுமட்டுவாள், வரணி, கரவெட்டி, வல்லைவெளி, ஊடாக பரந்து சென்று வல்வெட்டித்துறைக்கு அண்மையில் உள்ள தொண்டைமானாற்றினூடாக கடலுடன் கலக்கிறது. இதன் கிளையானது சரசாலையில் தொடங்கி யாழ்ப்பாணப் பட்டினம் நோக்கி பரந்து செம்மணிக்கு அண்மையில் உள்ள அரியாலைக் கடலை அடைகின்றது.

இது கிட்டத்தட்ட ஒரு மைல் அகலமாக, குடாநாட்டில் இருதயப் பகுதியில் கூடுதலாகவோ குறைவாகவோ முழுமையாக பரந்து காணப்படுகின்றது. இது குடாநாட்டின் மக்களது வாழ்க்கையிலே தாக்கத்தை செலுத்தும் முழுமையான காரணியாக இருக்கிறது.

தொண்டைமானாற்றில் அமைக்கப்பட்ட 600 அடி நீளமான தடுப்பணையின் மூலமாக கடல் நீர் உட்புகுவது தடுக்கப்பட்டுள்ளது. ஆனையிறவில் செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டம் மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

ஆனையிறவு பாலத்திற்கு அருகில் உள்ள தடுப்பணை கனகராயன் ஆற்றிலிருந்து வரும் வெள்ள நீரை சேமித்து பாதுகாத்து மேற்குப் பகுதியில் உள்ள கடல் நீர் ஊடுருவாமல் தடுக்கும். இதன் கிழக்கு எல்லையில் சுண்டிக்குளத்தில் அமைந்த ஒன்றேகால் மைல் நீளமான பாதையோடு இணைத்துக் கட்டப்பட்ட தடுப்பணையும், வானும் மேலதிக வெள்ள நீரை பாதுகாப்பாக கடலுக்குள் செலுத்துவதற்கும், கடல் நீர் கிழக்கிலுள்ள ஏரியினுள் உட்புகாமலும் உறுதிப்படுத்தும்.

இவ்வாறு கிழக்கிலும் மேற்கிலும் அமைக்கப்பட்ட கட்டமைப்புகள் மேலதிகமாக வெள்ள நீரை பெற்று பாதுகாப்பாக சேமித்து வைக்கும். அதே நேரத்தில் இதன் மூன்றாவது அங்கமான இணைப்புக் கால்வாய், தேங்கிய நீரை யாழ்ப்பாண குடாநாட்டின் இருதயப் பகுதிக்கு கொண்டு செல்லும், இவ் வேலைத்திட்டத்தின் முடிவில் கனகராயன் ஆற்றின் வெள்ள நீர் ஆனையிறவு ஏரி மற்றும் வடமராட்சி ஏரிகளின் உவர் நீர்த்தன்மையை படிப்படியாக நீக்குவதற்கும் பயன்படும்.

வண்டல்படுக்கை அமைந்த இரண்டாம் நிலை தேக்கத்திலும் பார்க்க உவர் நீர் வெளியேறி களிமண் படுக்கையுள்ள முதன்மை நீர்த்தேக்கம் அமைவதற்கும் விரைவுபடுத்தும். குறுகிய காலத்தில் உவர்த்தன்மைக் குறைப்பானது உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட முடியாத போதிலும் இதனால், ஏற்படும் நன்மைகளைப் பெறுவதற்கு அதிக காலம் காத்திருக்கத் தேவையில்லை.

இதன்பயன்கள் உடனடியாக வந்தடையாமல் ஒவ்வொரு மழைக்காலத்தின் பின்பும் மேலும் மேலும் விருத்தியடையும். மேலும் பகுதியான உவர் நீரானது, பயன்படுத்தப்பட முடியா விட்டாலும் வேளாண்மைக்கு உகந்ததாகக் காணப்படும்.



அதேவேளை, இந்நிலை, குடா நாட்டின் கரையோரப் பகுதிகளில் உள்ள பல கிணறுகள் மூலமாக செய்யப்படும் வேளாண்மையினால் புலப்படும்.

நாட்கள் செல்லச்செல்ல மாசி பங்குனி சித்திரை மாதங்களில் உள்ள கூடிய வெப்பத்தினால், குறிப்பிடத்தக்க ஆவியாதல் நிகழும், இரண்டாம் நிலை நீர்த்தேக்கத்தின் கூடிய அளவான நீர் இழப்பை, ஆனையிறவு நீர் தேக்கத்திலிருந்து நீரை, கால்வாயினூடாக செலுத்தி இரண்டாம் நிலை தேக்கத்ந்தை தொடர்ந்தும் நிரம்பல் நிலையில் வைத்திருக்கலாம்.

இவ்வாறான நிரப்பு நிலையானது, தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காலமான ஆனி, ஆடி மாதங்களில் ஏற்படும் பாரியளவு ஆவியாதலின் விளைவாக சாத்தியமற்றதரக இருக்கும்.

இதன் விளைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஏரி, பாரிய நன்னீரேரியைக் கொண்டிருக்கமுடியும். இதன் விளைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள நிலங்கள் விருத்தியடைந்து பன்மடங்கு நன்மையடையும்.

இதன் மூலம் நிலக்கீழ் நீர் தாராளமாக அமைவதோடு நீர்மட்டமும் உயர்வடையும். வருடங்கள் செல்லச் செல்ல கிணற்றுநீர் மட்டமும் உயர்வடையும்.

நிலத்தின் கீழுள்ள மண்ணின் ஈரப்பதன் அதிகரிக்கும். தாவர வளர்ச்சி பல்கிப் பெருகும். தென்னைகளுக்கும் ஏனைய மரங்களுக்கும் கோடையில் ஏற்படும் உற்பத்தி வீழ்ச்சி நிலைமை இல்லாமல் போகும்.

இத்திட்டம் அமைந்துள்ள ஏரியின் அண்மையில் உள்ள 15 ஆயிரம் ஏக்கர்களுக்கும் அதிகமான காணிகள் வேளாண்மை விருத்திக்கு உதவும்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் உற்பத்தியாகும் கனகராயன் ஆற்றின் நீரை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கொண்டுவந்து தொண்டை மானாறு மற்றும் யாழ்ப் பாணப்பட்டினத்தின் எல்லையில் அமைந்துள்ள அரியாலையில் உள்ள வானூடாக பாயச் செய்யும். இதுவே யாழ்ப்பாணத்துக்கான நீர்த் தேவையை பூர்த்தி செய்ய சரியானதும் இயற்கையின் இயக்கத்துடன் இணைந்ததுமான பொருத்தமான தீர்வாக அமையமுடியும்.

**எந்திரி**
**ஏ.இரகுநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பெரியகடை மதுக்கடைக்கு எதிராக மக்கள் போர்க்கொடி

(குருமன்காடு)

**மன்னார் பெரியகடை கிராமத்தில் மக்கள் குடியிருப்பிற்கு அருகாமையில் தனியார் ஒருவருடைய வீட்டில் தற்போது அமைக்கப்பட்டு வரும் மது விற்பனை நிலையத்தை உடனடியாக அகற்றக் கோரி பெரியகடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் பெரிய கடை கிராம மக்களும் இணைந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் எதிர்ப்பு பேரணி ஒன்றை மேற்கொண்டனர்.**

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் பெரியகடை உப்பள பிரதான வீதியில் ஒன்று கூடிய கிராம மக்கள் குறித்த மது விற்பனை நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை ஆரம்பித்து பெரிய கடை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மது விற்பனை நிலையத்தினூடாக ஊர்வலமாக சென்று மன்னார் நகர சபையை சென்றடைந்தனர்.

பின் தமது பிரச்சினைகளை தெரிவித்தனர். மன்னார் பெரியகடை கிராமத்தில் மக்கள குடியிருக்கும் பகுதியில் தனியார் வீடு ஒன்றில் மது விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பெரியகடை கிராமம் பிரதான இடத்தில் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த எவரும் குறித்த மதுபானசாலையை அமைக்க அனுமதி வழங்கவில்லை.

நீர் வடிகாலமைப்பு மற்றும் சமுர்த்தி உதவித்திட்டம் ஆகியவற்றிற்கு இக்கிராம மக்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை தவறான முறையில் பயன்படுத்தி இக்கிராம மக்களும் ஆதரவு வழங்குவதாக கோரி குறித்த மது விற்பனை நிலையத்தினை அமைத்து வருகின்றனர்.

இவ்விடத்தில் அமைப்பது மது விற்பனை நிலையம் என்று ஒரு சில வராங்களுக்கு முன்புதான் இக்கிராம மக்களுக்கு தெரிய வந்தது.

இந்த நிலையிலே இக்கிராம மக்கள் அனைவரும் இணைந்து எதிர்ப்பு பேரணியில் ஈடுபட்டோம் என அந்த மக்கள் தெரிவித்தனர். (ம-250)

## பிரதேசசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் 2014 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்கள் பல தோல்வியடைந்து சபைகளின் ஆட்சி அதிகாரம் ஆட்டம் காணும் நிலையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எந்த எதிர்ப்பும் இன்றி சபை உறுப்பினர்களின் முழுமையான ஆதரவுடன் நேற்று முன்தினம் நிறைவேறியது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக்குரிய 2014 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்திற்கான இறுதி விவாதம் நேற்றைய தினம் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் பிரதேசசபைத் தலைவர் க. சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இவ் விவாதத்தின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 7 பேரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 3 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆக 10 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அவர்கள் 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் சிறப்பானதாகவும் மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் உள்ளதாக தெரிவித்து வாக்கெடுப்புக்கு விடாமல் ஏகமனதாக நிறைவேற்றினர். (ம-250-266)

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துக

பூநகரி பிரதேசத்தில் பல கிராமங்களில், கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்த நிலையில் இக்கட்டாக் காலிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய கமக்கார அமைப்பினர் உரிய நடவடிக்கை எடுக்காத அசமந்தப்போக்கினால் பெரும் அழிவுஏற்படுவதாக பள்ளிக்குடா, நல்லதண்ணிக் குளம், செம்பன்குண்டு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நல்ல தண்ணிக்குளம் கிராமத்தில் இரவு நேரங்களில் கட்டாக்காலிகளால் அழிக்கப்படும் 15 இற்கு மேற்பட்ட ஏக்கர் நெல் வயல்கள் கைவிடப்பட்டதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கமக்கார அமைப்புக்களின் நிர்வாகிகளே தமது மாடுகளை கட்டாக்காலியாக விடுவதால் அவைகளால் ஏற்படுத்தப்படும் கழிவுகளை நாம் யாரிடம் முறையிடமுடியுமென விசனம் தெரிவிக்கிறார்கள்.

உயர்மட்ட விவசாயப் பகுதி அலுவலர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து கட்டாக் காலிகளைக்கட்டுப்படுத்த வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-84)

# ஒரு கோடி ரூபா கப்பம் கேட்டு கடத்தப்பட்ட நபர் தடுத்து வைப்பு

(குருமன்காடு)

வவுனியாவை சேர்ந்த ஒருவரை கடத்திச் சென்று யாழ்ப்பாணம் நெடுந்தீவில் தடுத்து வைத்து பிரான்ஸில் இருக்கும் அவரது மகனிடம் ஒரு கோடி ரூபா கப்பம் பெற முயற்சித்த வடக்கில் செயற்பட்டு வரும் அரசியல் குழுவை சேர்ந்த சிலரை கைது செய்வதற்கான விசாரணைகளை வவுனியா பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா குருக்கள்புளியங்குளம் பிரதேசத்தை சேர்ந்த மார்க்கண்டு ஸ்ரீஸ்கந்தராஜா என்ற 56 வயதான நபரை கடத்திச் சென்று இவர்கள் இவ்வாறு கப்பம் பெற முயற்சித்துள்ளதாக வவுனியா மற்றும் மன்னாருக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி மார்க்கண்டு ஸ்ரீஸ்கந்தராஜாவின் வீட்டுக்கு சென்ற குழுவினர் குடும்பத்தினரின் விபரங்களை கேட்டு எழுதிக் கொண்டு தண்ணீர் பம்பு ஒன்றை தருவதாக கூறிவிட்டுச் சென்றுள்ளனர். இதனை பெற்றுக்கொள்வதற்காக கடந்த 14 ஆம் திகதி வவுனியா நகருக்கு வருமாறு அறிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் ஸ்ரீஸ்கந்தராஜா கடந்த 14 ஆம் திகதி வவுனியா நகருக்கு சென்ற போது அங்கு வான் ஒன்றில் வந்த பொருட்களை வழங்கும் அரசசார்பற்ற நிறுவனத்தின் ஊழியர்கள் எனக் காட்டிக் கொண்ட நபர்கள், பொருட்கள் கிளிநொச்சியில் வழங்கப்படுவதாக கூறி அவரை வானில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் கிளிநொச்சிக்கு அழைத்து சென்ற அவர்கள் நிறுவனத்தின் பணிப்பாளர் நெடுந்தீவில் இருப்பதாக ஸ்ரீஸ்கந்தராஜாவை அங்கு அழைத்துச் சென்று இவ்வாறு தடுத்து வைத்து கப்பம் கோரியுள்ளனர்.

ஸ்ரீஸ்கந்தராஜாவின் மகன் பிரான்ஸில் விபத்துக்குள்ளாகி உடல் ஊனமுற்றிருப்பதாகவும் இதற்காக அவருக்கு ஒரு கோடி ரூபா இழப்பீடு கிடைக்கவுள்ளதாகவும் இந்த பணத்தை பெறுவதற்காகவே அவரை சந்தேக நபர்கள் கடத்திச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த கடத்தல் சம்பவத்திற்கு பிரான்ஸ் நாட்டில் உள்ள சிலருக்கும் தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது.

சில தினங்கள் நெடுந்தீவில் ஒரு வீட்டில் சிக்கியிருந்த ஸ்ரீஸ்கந்தராஜா அவரது பாதுகாப்பு நிறுத்தப்பட்டிருந்த இளைஞர்களிடம் நட்புறவாக பழகி அந்த வீட்டில் இருந்து வெளியேறி படகு மூலம் பருத்தித்துறைக்கு வந்து அங்கிருந்து பஸ்ஸில் ஏறி வவுனியாவுக்கு தப்பி வந்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

இவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வானை கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-250)




# வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு

நத்தார் மற்றும் புதுவருடப் பிறப்புக் காலங்களுக்கான வியாபார நடவடிக்கைகளை முன்னிட்டு, மன்னார் நகரசபை பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு மன்னார் நகர சபை இடம் ஒதுக்கீடு செய்துள்ளதாக மன்னார் நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதி தொடக்கம் மன்னார் பிரதேச செயலகம் வரை வியாபார நிலையங்களை அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுவரையில் 137 தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் மேற்படி வியாபார நிலையங்களின் உரிமையாளர்களிடமிருந்து 15 இலட்சம் ரூபா நில வாடகையாக அறவீடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில்இ வியாபார நிலையம் ஒன்று அமைப்பதற்கான நில வாடகையாக 12 ஆயிரம் ரூபா அறவீடு செய்யப்படுகின்றது. இருப்பினும் கடை கொண்டுள்ள நில அளவுக்கு ஏற்ப வாடகை அறவீடு செய்யப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

இன்னும் 20 வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் இடம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான வியாபார நிலையங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிவரையுமே இயங்க முடியும் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு கிடைக்கும் பணத்தைக் கொண்டு மன்னார் தனியார் பேரூந்து தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்கு மன்னார் நகர சபை தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார். (ம-250)

# நானாட்டன் விவகாரம் தொடர்பான 18 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(குருமன்காடு)

மன்னார், நானாட்டான் பிரதேச செயலகம் மீது தாக்குதல் மேற்கொண்டதாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18பேருக்கான விளக்கமறியலை எதிர்வரும் 23ஆம் திகதி வரை நீடிக்க மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்னம் கடந்த புதன் கிழமை உத்தரவிட்டார்.

நானாட்டான் பிரதேச் செயலகம் மீது கடந்த 9 ஆம் திகதி தாக்குதல்களை மேற்கொண்டதாக கூறி பொன்தீவு கண்டல் கிராமத்தைச் சேர்ந்த 65 பேரை முருங்கன் பொலிஸார் கைது செய்து கடந்த 15ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ, 18பேரை கடந்த 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு ஏனைய 47 பேரையும் தலா 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததோடு குறித்த 47 பேரையும் கடந்த புதன் கிழமை மன்னார் நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 பேரும் கடந்த புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் குறித்த 18 பேரையும் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பிணையில் விடுதலை செய்யப்பட்ட 47 பேரும் மன்றில் ஆஜராகிருந்த நிலையில் அவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம உட்பட்ட சட்டத்தரணிகளான பிரிமூஸ் சிறாய்வா, ஜோன்தாசன் துசித், எஸ்.ஜெபநேசன லோகு ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆனைக்கோட்டை றோ.க.த.பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினர் மாணவனொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# அமெ. சிறையிலிருந்தவர் நாடு கடத்தப்பட்டார்

அமெரிக்காவில் சிறைவாசம் இருந்து வந்த சிங்கப்பூர் தமிழர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அமெரிக்க டலாஸ் சிறையில் இருந்து சிங்கப்பூருக்கு நாடு கடத்தப்பட்டார்.

மேரிலேண்ட் பகுதியில் இருந்து சுமார் 900,000 டொலர் பெறுமதியான ஆயுதங்களை இலங்கையின் விடுதலைப்புலிகளுக்கு கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2010 ஆம் ஆண்டு நாயுடு குற்றவாளியாக காணப்பட்டு 5 வருட சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந் நிலையிலேயே அவர் கடந்த புதன்கிழமை சிங்கப்பூருக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். (அ-2)

# உலகத்தின் மத்தியில் சீர்கெட்ட இனமாக இலங்கையர்கள்

## சஜித் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனத்தவர்கள் உலகத்தின் முன்னால் ஆபத்தான சீர்கெட்ட இனத்தவராக மாறி வருகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் இனத்தவர்கள் என்றும் உலகத்தினருக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வந்தனர்.

ஹெரோயின் போதைப் பொருள போன்ற ஒழுக்க கேடான நடத்தைகள் நாட்டின் சடுதியாக பரவி வருவதால் உலகத்தினர் முன்னால் சீர்கெட்ட இனமாக மாறியுள்ளனர்.

இலங்கையில் ஹெரோயின் போதைப் பொருள் என்ற தொற்று நோய் பரவியுள்ளமையானது இலங்கையை ஆசியாவின் ஹெரோயின் போதைப் பொருளின் அதிசயமாக மாற்றியுள்ளது.

உலக நாடுகளுக்கு ஹெரோயின் போதைப் பொருளை விநியோகிக்கும் நிலையமாக இலங்கை முத்திரை குத்தப்பட்டு வருகிறது.

அரசியல்வாதிகள் நண்பர்களாக மாறியுள்ள சிலர் மேற் கொண்டு வரும் இந்த நடவடிக்கையால் இந்த அபாயத்தை கட்டுப்படுத்துவதும் சிரமமாகியுள்ளது.

அரசியல்வாதிகளின் உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக போதைப் பொருள் விற்பனையாளர்கள் ஆளும் கட்சியின் அரசியல்வாதிகளுக்கு பணத்தை தயக்கமின்றி செலவிட்டு வருகின்றனர் என்றார். (அ-2)

# முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குக

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

**விடுதலை புலிகளுடனான மோதல்களின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தஞ்சை அருகே உருவாக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கல் நினைவு முற்றம் விதி முறைகள் மீறிக் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தமிழக அரசிற்கு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருக்கிறது.**

தஞ்சை விளார் வீதியில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அம்முற்றம் கடந்த நவம்பர மாதம் திறந்துவைக்கப்பட்டது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் கணவர் எம்.நடராஜன் உதவியுடன் உலகத் தமிழர் பேரமைப்பின் பழ நெடுமாறனின் முன்முயற்சியில் உருவாகியிருக்கும் இந்த நினைவுமுற்றம் பல்வேறு சிக்கல்களுக்குப் பின் உயர்நீதிமன்ற அனுமதியுடன் தான் திறந்துவைக்கப்பட்டது.

ஆனால் அதற்கடுத்த ஒரு வாரத்திலேயே அரசு நிலத்தை ஆக்கிரமித்துக கட்டியிருப்பதாகக் கூறி முள்ளி வாய்க்கால்நினைவுமுற்றத்தின சுற்றுச் சுவர் மாவட்ட நிர்வாகத்தால் இடிககப்பட்டது.

தொடர்ந்து விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளதாகக் கூறி கட்டட அனுமதியினை ஏன் திரும்பப பெறக் கூடாது என விளக்கம்கேட்டு விளார் பஞ்சாயத்து முற்றம் அமைப்புக் குழுவினருக்கு நோட்டீசும் அனுப்பியது.

அந்த நோட்டீசை இரத்து செய்யக கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ. நெடுமாறன் வழக்கு தொடரந்தார.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, நீதிபதிகள் அக்னிஹோதரி மற்றும் சசிதரன் அரசு முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற அமைப்பாளர்களுடன் அமர்ந்து விவாதித்து, விதிகள் மீறப்பட்டிருக்கின்றனவா என்பது குறித்து அடுத்த 15 நாட்களில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற அமைப்புக் குழுவினரை செயற்படவிடாமலும் பொதுமக்கள் வருகைக்கு இடையூறு செய்யும் வகையிலும், மாவட்ட நிர்வாகம்நடந்துகொள்வதைத் தடுக்கவேண்டுமென்றும், கடந்த நவம்பர்13 ஆம்நாளன்று சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டபோது நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டு மென்றும் கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுக்களும் அடுத்த இரண்டு நாட்களில் சென்னை உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு வர விருப்பதாகத் தெரிகிறது. (எ-11)

# கலைவிழா

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் கலை விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பாளர் எஸ்.சத்தியகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், வலி.கிழக்குமத்தியஸ்தர்சபையின்தலைவர் இ.மயில்வாகனம், உரும்பிராய் கிழக்கு கிராம அலுவலர் இ.எழிலரசன், உரும்பிராய் கிழக்கு சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர் க.சிந்துஷா, வலி.கிழக்கு முன்பள்ளி இணைப்பாளர் ஸ்ரீதேவி ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர். (அ-9)

# ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இமையாணன் அ.த.க வித்தியாலய பழைய மாணவர்களுக்கான விசேட ஒன்று கூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# சிறுவயதில் கர்ப்பமடையும் சமூக சீர்கேடு அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

திருமணம்செய்யும்வயதை அடையும முன்னர் பருவமடைந்த சிறுமிகள கர்ப்பம் தரிப்பது அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடமத்திய மாகாணம் மற்றும் மொனராகலை போன்ற பின் தங்கிய பிரதேசங்களில் இந்த சமூக சீர்கேடு நிலைமை அதிகரித்து காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இணையத்தளம் மற்றும் செல் போன்கள் மூலமாக ஆபாசப் படங்களை பார்ப்பது, கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் என்பன காரணமாக இந்த சம்பவங்கள அதிகரித்தன.

பின்தங்கிய பிரதேசங்களிலேயே வயது குறைந்த சிறுமிகள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்து காணப்படுகிறது.

அப்பிரதேசங்களில் உள்ள 13 முதல்14 வயது வரையுள்ள சிறுமிகள் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சூழ்நிலை அதிகரித்து காணப்படுகிறது.

இவ்வாறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் பிள்ளைகளின் தாய்மார் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகின்றனர்.

இதனால் இந்தப் பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பிலுள்ள உறவினர்களினால் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

சிறுவயது கர்ப்பம் தரிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், அது பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# அமெரிக்க தகவல் கூடத்தின் ஆங்கில செறிவூட்டல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.அமெரிக்க தகவல் கூடத்தினரால் நான்கு மாத கால ஆங்கிலம் செறிவூட்டல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறி எதிர்வரும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி ஏப்ரல் 30 ஆம் திகதியுடன்முடிவடையவுள்ளதுடன்வாரத்தில் புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இதற்கான பதிவுகளை ஜனவரி 6 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். தகவல் கூடத்தில் மேற்கொள்ள வேண்டும்.

பயிற்சி நெறியில் பங்கு கொள்வதற்கான அனுமதிக்கான தேர்வுப் பரீட்சை ஜனவரி மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.அமெரிக்க தகவல் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பாடநெறியை முழுமையாக பூர்த்தி செய்தவர்களுக்கு மாத்திரமே சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள 077 088 3826 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் americancornerjafffina2011@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்பு கொள்ள முடியும். (அ-9)

# பிரதமரை தீர்மானிப்பது ஜனாதிபதியின் கையில்

## அமைச்சர் தினேஷ்

(கொழும்பு)

அடுத்த பிரதமர் யார் என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தீர்மானிப்பார் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் நேற்று முன்தினம் இதனை குறிப்பிட்டார்.

சகல கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியாது போனால் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எப்படி பிரதமராக போகிறார் என அத்து கோரள தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நான் பிரதமராக போவதில்லை. நீங்களும் பிரதமர் யார் என்பதை தீர்மானிக்க முடியாது. பிரதமர் யார் என்பதை ஜனாதிபதி முடிவு செய்வார். தற்பொழுது பிரதமர் ஒருவர் இருக்கின்றார் என்றார். (அ-2)

# மின்கம்பத்துடன் மோதிய மினிபஸ்...



மாதகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் காலை பயணித்துக் கொண்டிருந்த தனியார் பயணிகள் சிற்றூர்தியொன்று காடாப்புலம் சந்தி மாதகலில்வீதியை விட்டு விலகியதில் அருகிலுள்ள மின்கம் பத்துடன் விபத்துக்குள்ளானது.

இதில் பயணித்த பயணிகளில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனையோர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டார்டிகா மலைகளில் வைரப் படிவங்கள்

அண்டார்டிகா பனிப்பிரதேச மலைகளில் வைரப் படிவங்கள் இருப்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

கிழக்கு அண்டார்டிகாவில் கிம்பர்லைட் வகைப் பாறைகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதன் மூலம் அங்கு வைரப் படிவங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆபிரிக்கா, சைபீரியா, அவுஸ்திரேலியா பகுதிகளில் கிம்பர்லைட் பாறைகள் கண்டறியப்பட்ட இடங்களில்தான் வைரங்கள் தோண்டியெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், வர்த்தக ரீதியாக அண்டார்டிகா பகுதியில் கனிமங்கள் தோண்டியெடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. கிம்பர்லைட் எனப்படும் எரிமலைக் கற்களில் வைரங்கள் உள்ளன. இவ்வகைக் கற்கள் பூமியில் அரிதாகவே உள் ளன. அண்டார்டிகாவில் கிம்பர் லைட் பாறைகள் கண்டறியப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

அங்கு ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் தலைமையிலான குழு இதனைக் கண்டறிந்துள்ளது. ஆய்வாளர்கள் கூறுகையில்,

இன்றைய ஆபிரிக்கா, இந்தியத் துணைக்கண்டம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மடகஸ்கார், அண்டார்டிகா, அரேபியா ஆகிய பகுதிகள் இணைந்திருந்த பெருங்கண்டம் கோண்டுவானா என அழைக்கப்பட்டது. தற் போதுள்ள புவியமைப்புப்படி கண்டங்கள் பிரிந்ததில் இளவரசர் சார்லஸ் மலைப்பகுதி அண்டார்டிகாவில் உள்ள லம்பெர்ட் பள்ளத்தாக்குடன் இணைந்து விட்டது. அப்பகுதியில் தான் கிம்பர்லைட் பாறைப் படிவுகள் கண்டறியப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளனர். (அ-2)

# திரையரங்கின் கூரை விழுந்ததில் பார்வையாளர்கள் 90 பேர் படுகாயம்

## திரையரங்கின் மேற் கூரையின் ஒரு பகுதி இடிந்து கீழே விழுந்ததில் பார்வையாளர்கள் 90 பேர் படுகாயமடைந்தனர்.



இச் சம்பவம் பிரித்தானியாவின் தலைநகர் லண்டன் திரையரங்கத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,

லண்டனின் வெஸ்ட் எண்ட் தியேட்டர் மாவட்டத்தில் 112 ஆண்டு கால பழைமையான அப்போலோ என்ற திரையரங்கம் உள்ளது. 1901ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த திரையரங்கம், 4 தளங்களுடன் பல்கனி உட்பட 755 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து படம் பார்க்கும் வசதி கொண்டது. வெளியான ஓர் ஆங்கில படத்தை மாலை வேளையில் இந்த திரையரங்கில் அமர்ந்து சுமார் 720 பேர் ரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, நான்காவது மாடியின் பல்கனி பகுதியில் உள்ள பொய் கூரை திடீரென பெயர்ந்து விழுந்தது. அதன் கனம் தாங்காமல் மூன்றாவது மாடியின் தரை பகுதி இடிந்து நொறுங்கி, இரண்டாவது மாடி கூரையின் மீது விழுந்தது.

பயங்கர சத்தத்துடன் தளம் நொறுங்கி தங்கள் மீது விழுந்ததால் சுவாரஸ்யமாக படத்தை ரசித்துக் கொண்டிருந்த மக்கள் பீதி அடைந்தனர். பெண்களும் குழந்தைகளும் பயத்தில் அலறி கூச்சலிட்டபடி உயிரை காப்பாற்றிக் கொள்ள இருட்டில் அங்கும், இங்கும் ஓடினர். ஓடிய வேகத்தில் பலர் கீழே விழுந்தனர். பின்னால் ஓடிவந்த பலர் அவர்களை மிதித்துக் கொண்டு வாசலை நோக்கி ஓடினர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 90 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இலேசான காயமடைந்த நூற்றுக்கணக்கானோர் முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினர்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர் ஒருவர் கூறுகையில், நாங்கள் தியேட்டர் மேடைக்கருகில் 4 இருக்கைகள் தள்ளி நாடகம் பார்த்துக் கொண்டிருந் தோம்.

அப்போது நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தவர் அங்கு வாருங்கள், அங்கு வாருங்கள் என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்.

முதலில் அதை நாங்கள் நாடகத்தின் ஒரு பகுதிதான் என நினைத்திருந்தோம். பின்னர்தான் அது விபத்து என்று தெரியவந்தது என்று கூறினார்.. (அ-2)

# அணுவாயுதப் பெருக்கத்தை ஈரான் நிறுத்த வேண்டும்

## சீனாவிடம் இஸ்ரேல் வலியுறுத்து



அணு ஆயுதங்களை ஈரான் வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபடாது என்பதை உறுதிசெய்யுமாறு சீனாவிடம் இஸ்ரேல் வலியுறுத்துள்ளது.

ஜெருசலேமில் கடந்த புதன்கிழமை சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ மற்றும் இஸ்ரேஸ் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் சந்தித்துப் கலந்துரையாடினர்.

அப்போது, வாங் யீயிடம் நெதன்யாகு கூறுகையில்,

உலகில் அமைதி நிலவ, அணு ஆயுதப் பெருக்கத்தை ஈரான் கண்டிப்பாக நிறுத்த வேண்டும்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்கள் அனைத்துக்கும் ஈரான் இணங்கி நடக்க வேண்டும். இதற்கு சர்வதேச சமுதாயமும் பக்கபலமாக இருக்க வேண்டும் என றார்.

இதேவேளை சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ கூறுகையில், இஸ்ரேலுடனான நட்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த வந்துள்ளேன்.

இஸ்ரேல்-பாலஸ்தீன நாடுகளுக்கு இடையேயான அமைதி பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும். அந்தப் பேச்சுவார்த்தை மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அடித்தளமாக அமையும் என நம்புகிறேன் என்றார்.


முன்னதாக பாலஸ்தீனம் சென்றிருந்த வாங் யீ, ரமல்லாவில் அந்நாட்டின் ஜனாதிபதி மஹ்முத் அபபாஸ் சந்தித்தபோது, பாலஸ்தீன உரிமைகள் மற்றும் குறிக்கோள்களுக்கு சீனா துணையாக இருக்கும் என்று உறுதியளித்தார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரியின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இஸ்ரேல்-பாலஸ்தீன பேச்சுவார்த்தை வெற்றிபெறும் என்றும் வாங் யீ நம்பிக்கை தெரிவித்தார்.

இஸ்ரேலில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீயை வரவேற்கிறார் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. (2)




# சிரிய மனிதவுரிமை மீறல்களை கண்டித்து ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றம்



(நியூயோர்க்)

சிரியாவில் நடைபெற்றுள்ள மனித உரிமை மீறல்களுக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா.பொதுச் சபையில் கடந்த புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சவுதி அரேபியா சார்பில் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் வரவேற்றுள்ளன. மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறியதாக சிரிய ஜனாதிபதி பஷார் அசாத்துக்கு கடும் கண்டனம் தெரி விக்கப்பட்டதுடன், அரசுக்கு எதி ராக அங்கு நிலவி வரும் கிளர்ச்சி குறித்து கவலை தெரிவிக்கப் பட்டது.

ஐ.நா.பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட, இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 127 நாடுகளும், எதிராக 13 நாடுகளும் வாக்களித்தன. 47 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சிரியா தலைநகர் டமாஸ்கஸின் கெய்தா பகுதியில், கிளர்ச்சியாளர்கள் மீது அரசு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்கியதாகக் கூறப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர், இந்தத் தீர்மானத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

சிரியாவில் மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டு வரவும், உள்நாட்டுப்போரின் போது கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கவும், மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டு போரில், இதுவரையில் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தேவயாணி மீதான வழக்கை திரும்பப் பெற முடியாது

## அமெரிக்கா தெரிவிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவுக்கான இந்திய துணைத் தூதர் தேவயாணி மீதான வழக்கை திரும்பப் பெற முடியாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விசா மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில், நியூயோர்க் இந்திய துணைத்தூதர் தேவயாணி கைது செய்யப்பட்டு, ஆடை அவிழ்த்து சோதனை நடத்தி, அவமதிக்கப்பட்ட விவகாரம் நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இதில் அமெரிக்காவுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப் பிரச்சினையில் கடுமையான நிலையையும் எடுத்துள்ளது. இது குறித்து அறிந்ததும், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனுடன் கடந்த சில தினங்களுக்கு முன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருத்தம் தெரிவித்தார்.

இந்த நிலையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், தேவயாணி மீதான வழக்கை தொடரக்கூடாது. இந்த வழக்கை உடனே திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். இதனிடையே, இந்திய துணைத்தூதர் தேவயாணி மீதான வழக்கை திரும்ப பெறமுடியாது என்று அமெரிக்க வெளியுறவு செய்தி தொ[illegible] மேரி ஹார்ப் தெரிவித்[illegible]

மேலும் அவர், தேவயாணி சட்ட விதிமுறைகளின் படிதான் இந்த வழக்கு கையாளப்பட்டுள்ளது. அமெரிக்கா, பாதிக்கப்பட்ட பணிப்பெண்ணை அவரது குடும்பத்தினருடன் இணைக்க முயற்சி மேற்கொண்டு வருகிறது. அந்த பெண்ணின் குடும்பத்திற்கு இந்தியாவில் மிரட்டல் இருப்பதாக அறிகிறோம். இதை நான் உறுதியாக கூற முடியாது. பொதுவாக இது போன்ற குற்றச்சாட்டுகளை நாங்கள் கடுமையாக கையாள்வோம் என அவர் தெரிவித்தார். வழக்கை திரும்பப் பெறுமாறு நீதிமன்றத்தை அரசு கேட்குமா? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த மேரி [illegible] (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர்களின் போராட்டம் நேற்று 2 ஆவது நாளாகவும் தொடர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுகாதார தொண்டர்களின் போராட்டம் நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 21 சுகாதார சேவைகள் பிரிவில் தொண்டரடிப் படையில் பணியாற்றிய சுமார் 300 பேர் வரையிலான தொண்டர்களே தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்கக்கோரி வீதி மறியல் போராட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக ஈடுபட்டுவருகின்றனர்.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனையில் முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பணிமனைக்கு செல்லும் வாயிலை வழிமறித்து தொண்டர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால்பணிமனைக்குபணிக்கு செல்வோர் உட்பட அனை வரும் பணிமனைக்கு வெளியே வீதியில் காத்திருந்தபோதும் அவர் களை உள்ளே செல்வதற்கு போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் இறுதிவரை அனுமதிக்கப்படவில்லை. இதனால் சுகாதார சேவைகள் பணிமனையின் நாளாந்த செயற்பாடுகள் முற்றாக செயலிழந்து காணப்பட்டன. இம் மறியல் போராட்டம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் தெரி விக்கையில்,

நாம் 1997 ஆம் ஆண்டு முதல் 6 ஆயிரம் ரூபா சம்பளத்திற்கு மட்டும் சேவையடிப்படையில் பணியாற்றி வருகின்றோம்.

கடந்த ஜுலை மாதமும் சுகாதாரத் துறையோடு தொடர்பில்லாத 589 பேருக்கு எம்மை புறக்கணித்து விட்டு நியமனங்களை வழங்கியுள்ளனர்.

இதுவரை காலமும் சுமார் 10-15 வருடங்கள் பணியாற்றி வந்துள்ளோம். ஆனால் எமது நலன்களினை சேவைக்காலத்தை கருத்திற் கொள்ளாது புதியவர்களிற்கு நியமனம் வழங்குவது எவ்வகையில் நியாயம்?

இனியும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவது தாமதிக்கப் பட்டால் நாம் வயோதிபர்களாகி விடுவோம். எம்மால் பணியாற்றவும் முடியாது.

ஆகவே இவ்வருடத்திற்குள் எமக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் நாம் தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம்.

நேற்று நடைபெற்ற வீதி மறிப்பு




போராட்டத்தின் போது அங்குவந்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலர் போராட்டத்தை நிறுத்துமாறு கோரியதோடு தாம் உள்ளே செல்வதற்கு அனுமதிக்குமாறும் கோரினர்.

எனினும் அவர்களின் கோரிக்கைகளை மறுத்த தொண்டர்கள் உயர் அதிகாரிகளுக்கு உரிய பதிலை வழங்கி அவர்களை மௌனமடையச் செய்தனர்.

இங்கு நின்ற அதிகாரிகளில் ஒருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களின் மனம் நோகும் படியாக "நீங்கள் எமக்கு தேவையில்லை. வேண்டுமென்றால் வேலையைவிட்டு நின்றுவிடுகள்" எனவும் திட்டித்தீர்த்தார்.

"நீங்கள் கூறுவதெல்லாம் பொய்" எனவும் கூறினார். இவ் அதிகாரிக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தகுந்த சான்றுகளை காட்டும் போது அவர் வாயடைத்து நின்றார்.

இவ் ஆர்ப்பாட்டம் தொடர்பில் வடமாகாண பிராந்திய சேவைகள் பணிப்பாளர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டு சிற்றூழியர்களுக்கான ஆட்சேர்ப்பு இடம் பெற்றபோது சுகாதாரத் தொண்டர்கள் மத்தியில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 205 சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

பின்பு இவ்வருடம் ஜுன் மாதம் யாழ்.மாவட்டத்தில் உள்ள சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களுக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 94 பேருக்கு சிற்றூழியர் நியமனம் வழங்கப்பட்டது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் GFATM என்ற திட்டத்தின் கீழ் தற்போது 258 பேர் சமூக சுகாதார பணியாளர்களாக மாதாந்தம் 6000 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவுடன் பணியாற்றி வருகின்றனர்.

தற்போது யாழ்.மாவட்ட சுகாதார திணைக்களத்தில் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் எதுவும் இல்லாத நிலையில் மேலதிக ஆளணியை உருவாக்கி வெற்றிடங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கான அனுமதி கிடைத்ததும் வெற்றிடங்களை நிரப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு சுகாதாரத் தொண்டர்களில் தகைமை உடையவர்களுக்கு சேவைக்காலத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-4)

## திருவாசக விழா போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

திருவாசக விழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சு,பண்ணிசை போட்டி முடிவுகளை உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றுக் கொண்ட மாணவர்களின் விபரம் வருமாறு:

**பாலர் பிரிவு -பேச்சு:**

ச.ரிஷிகேசன் (ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை), கஜமுகன் (பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.),லோ.கிருசன்(கண்ணகை அம்பாள் அ.நெ. பா.).

**கீழ் பிரிவு -பேச்சு:**

ஜே.பபிசாலினி(பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.), சி.நிவேதா (சிவகாமி அம்மன் அ.நெ.பா.), இருவர் மூன்றாம் இடம். வி.விதுஷன் (ஆத்மஜோதி அ.நெ. பா.), மு.ஷந்தோஸ் (கண்ணகை அம்பாள் அ.நெ. பா.).

**மத்திய பிரிவு-பேச்சு:**

ச.சர்வாணி (சிவகாமி அம்மன் அ.நெ.பா.), அ.வாகீஸ்பரன் (பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.), இருவர் மூன்றாமிடம். சு.டக்சனா (ஸ்ரீஇராஜ ராஜேஸ்வரி அ.நெ.பா.), சே.தாட்ஷாயினி (ஆத்ம ஜோதி அ.நெ. பா.).

**மேற்பிரிவு -பேச்சு:**

ஜீ.சுவஸ்திகன் (இளந்தொண்டர் சபை அ.நெ.பா.), சு.தனுசன் (கண்ணகை அம்பாள் அ.நெ. பா.), கு.குலதீப் (நரசிங்க வைரவர் அ.நெ.பா.).

**பாலர் பிரிவு பண்ணிசை:**

கு.லோகிதா (ஸ்ரீஆஞ்சநேயர் அ.நெ.பா), சி.ஆருஜன் (பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.), ப.லதீப்ராஜ் (நரசிங்க வைரவர் அ.நெ.பா).

**கீழ்பிரிவு பண்ணிசை:**

அ.அகல்விழி (ஸ்ரீஆஞ்சநேயர் அ.நெ.பா), சி.ஹம்சப்பிரியா (பரராஜ சேக ரப் பிள்ளையார் அ.நெ.பா.), ப.கபில்ராஜ் (நரசிங்க வைரவர் அ.நெ.பா.),

**மத்திய பிரிவு பண்ணிசை:**

இ.சங்கீர்த்தனன் (பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.), சி.சிவகௌரி (இளந்தொண்டர் சபை அ.நெ.பா.),

**மேற் பிரிவு பண்ணிசை:**

ப.கௌரீசன் (இளந்தொண்டர் சபை அ.நெ.பா.),

**கீழ்ப்பிரிவு கட்டுரை:**

ஸ்ரீ.ஸ்ரீனிவாசினி (பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.), க.சஞ்சீவ் (நரசிங்க வைரவர் அ.நெ.பா.), வ.அயுர்த்திகா (ஸ்ரீஆஞ்சநேயர் அ.நெ.பா.).

**மத்திய பிரிவு கட்டுரை:**

ர.கீர்த்திகா (பரராஜ சேகரப் பிள்ளையார் அ.நெ.பா.), ச.கோபிகா (கண்ணகைஅம்பாள்அ.நெ.பா.), கி.துஷாந்தி (நரசிங்க வைரவர் அ.நெ.பா.).

**மேற் பிரிவு கட்டுரை:**

இ.தேனுசா (ஆத்ம ஜோதி அ.நெ.பா.), ஜே.ஜென்சன் (நரசிங்க வைரவர் அ.நெ.பா.),த.டக்ஷிகா (ஸ்ரீஆஞ்சநேயர் அ.நெ.பா.). (அ)

## தமிழக மீனவர்கள் பிரச்சினையிலும் அக்கறை காட்ட வேண்டும்-வாசன்

அமெரிக்காவில் இந்திய தூதரக பெண் அதிகாரிக்கு ஏற்பட்ட அவமரியாதை செயலுக்கு மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய மந்திரி ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

டில்லியில் இருந்து நேற்று முன்தினம் மாலை சென்னை திரும்பினார். அப்போது விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து கூறுகையில்,

தூதரக பெண் பிரச்சினை தொடர்பில் மத்திய அரசும், எதிர்க் கட்சிகளும் ஒற்றுமையுடன் வலுவாக செயற்பட்டு முனைப்பு கட்டினார்கள்.

அதுபோல் தமிழக மீனவர கள் பிரச்சினையிலும் முனைப்பு காட்ட வேண்டும்.

மத்திய அரசும், எதிர்க்கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்கள் பிரச்சினை




முக்கியமான ஒன்றாகும்.

மத்திய, மாநில அரசுகள் இரு நாட்டு மீனவ பிரதிநிதிகளை இந்த மாத இறுதிக்குள் சந்தித்து பேச நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் இலங்கைக்கு வலுவான, உறுதியான முறையில் கண்டனத்தை தெரிவிக்க வேண்டும். இது தமிழகத்திலுள்ள அனைத்து கட்சிகள் மற்றும் மக்களின் ஒருமித்த விருப்பமாகும் என அவர மேலும் தெரிவித்தார். (2)

## மோடிக்கு தீவிரவாதிகள் கொலை மிரட்டல்



(புதுடில்லி)

நரேந்திர மோடிக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு பாரதீய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடி அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தானை சேர்ந்த ஜெய்ஷ் இ முகமது எனும் தீவிரவாத அமைப்பு நரேந்திர மோடிக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளது.

மோடி இந்தியாவின் பிரதமரானால் அவரை குறி வைத்து தாக்கப்போவதாக அந்த அமைப்பின் தலைவர் மவுலானா மசூத் அசார், அந்த அமைப்பின் இணையதளமான அல் குலாமில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் மற்றொரு தீவிரவாத அமைப்பான ஜமாத் உத்தவாவும் இதே எச்சரிக்கையை விடுத்துள்ளது. 2002ஆம் ஆண்டு குஜராத்தில் நிகழ்ந்த மத கலவரத்தை முஸ்லிம்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளது.

மோடிக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (2)

## 30 மீனவர்களுக்கு காவல் நீடிப்பு

(இராமேஸ்வரம் )

இராமேஸ்வரம் ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் 30 பேருக்கு எதிர் வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதி வரை காவல் நீட்டித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காவல் நீடிக்கப்பட்ட 30 மீனவர்களையும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்க மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர்கள் 13 பேர், ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் 17 பேர் கைது செய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## யோகா பயிற்சி அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் .யோகா அரங்கினத்தினர் நடாத்தும் யோகா பயிற்சியின் அறிமுக நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர் தேரடி அருகே) நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா அரங்க இயக்குநர் எஸ் .உமாசுதன் தலைமையில் ஆரம்பமாகின்றது.

யோகா பயிற்சி வகுப்புகள் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை தொடர்ந்து 20 நாட்கள் நடைபெறும். உடல் உள ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமான ஆசனப் பயிற்சிகள் சூரிய நமஸ்காரம், பிரணாயாமம், சாந்த வழிமுறை மற்றும் தியானப் பயிற்சிகள் தெரிவு செய்யப்பட்டு அனுபவமுள்ள யோகா ஆசானால் நுட்பமாகப் பயிற்சி வழங்கப்படுவதுடன் கையேடுகளும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சி நெறியில் இணைந்து பயன் பெற முடியும்.அறிமுக நிகழ் விலும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்கட்டும்.
~ கிரீஸ் நாட்டுப் பழமொழி~

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கின் தமிழ் அரசியல் தலைமைக்கு மங்குசனிக் காலமோ இது

அது உள்ளூராட்சி தேர்தல் காலம். தேர்தல் பிரசாரங்கள் அனல் பறக்கும் நேரம்.

பிரதேச சபைகளை கைப்பற்றினால் மட்டுமே எங்களின் அபிவிருத்தியை நாங்களே மேற்கொள்ளமுடியும் என்றவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார உரை ஒலிக்கிறது.

மக்களும் கரகோசம் செய்கின்றனர். தேர்தல் முடிவு வட மாகாணத்தில் ஓரிரண்டு பிரதேச சபைகளைத் தவிர, ஏனைய அனைத்து பிரதேச சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றுகின்றது.

தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கிய போதிலும், பிரதேச சபைகளை கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகளால் எதுவும் செய்யமுடியாமல் போயிற்று.

மக்கள் பணி செய்வோம் என்று பிரதேச சபையில் பதவி பெற்றவர்கள் அதனை முற்றாக மறந்தனர்.

இதன் காரணமாக நாய்த் தொல்லையும் குப்பை கழிவுகளின் ஆக்கிரமிப்பும் செப்பனிடப் படாத ஒழுங்கைகளின் உபத்திரவங்களும், மாசு நிறைந்த குடிநீருமாக எங்கள் வாழ்வு நகர்ந்து செல்கிறது.

உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றினால் மட்டுமே எங்களின் அபிவிருத்தியை நாங்களே முன்னெடுக்க முடியும் என்று கூறியவர்கள் அனைத்தையும் மறந்தனர்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டங்களை நிறைவேற்ற முடியாத அளவில் நிலைமை முற்றிவிட்டது.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி நடக்கும் பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டம் தோல்வி காணும் அளவில் சபை உறுப்பினர்கள் கட்சி என்ற கொள்கையை கைவிட்டு விட்டனர் என்பது தெளிவாகின்றது.

இத்தகைய நிலைமைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மிகவும் பலவீனமாகி விட்டமையே காரணமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலையிலும் கொழும்பிலுமே காலத்தைக் கடத்துகின்றார்.

சம்பந்தர் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் தன்னிச்சையான செயற்பாட்டால், மாவை சேனாதிராசா போன்றவர்கள் ஏனோதானோ என்ற மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலைமை காரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச சபைகளின் ஆட்சி நிர்வாகம் தொடர்பில் இவர்கள் எந்தக் கவனமும் செலுத்துவதாக இல்லை.

இது தவிர, பிரதேச சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களில் பலர் வடக்கு மாகாண சபையில் போட்டியிட ஆசை கொண்டனர்.

ஆசை நிறைவேறாத நிலையில், அவர்கள் தங்கள் வெறுப்பை வரவு செலவுத்திட்டத்தில் தாளித்து விடுகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் இங்குள்ள பிரதேச சபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் நிறைவேறாமல் தோல்வியில் முடிந்து போகின்றது என்ற செய்திக்குள், வடக்கு மாகாணத்தின் தமிழ் அரசியல் தலைமைக்கு மங்குசனி ஆரம்பித்து விட்டது என்றே கூறவேண்டும்.

இந் நிலைமையை தடுக்க வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வட மாகாணத்தை சேர்ந்த ஒரு தலைமையை அவசரமாக ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் பிரதேச சபை போலவே எங்கள் நிலைமையும் மாறிக் கொள்ளும்.

## வாகீசர் ச.ச.நிலைய பரிசளிப்பு விழா

அல்லைப்பிட்டி வாகீசர் சன சமூக நிலையத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வி.ட்பிள்யூ. கருணைராஜ் தலைமையில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை எஸ். திருநாவுக்கரசு கரண்டப்பாய் கந்தசாமி கோவில் ஜெயராஜ் குருக்கள், அல்லை றோ.க.த.க. அதிபர் வி.பத்மநாதன், அல்லை பராசக்தி அதிபர் எஸ். பத்மநாதன், அல்லை கிராம சேவகர் எஸ். இரட்னேஸ்வரன், சமாதான நீதவான் எஸ்.விநாயகமூர்த்தி, கிராம அபிவிருத்திச் சபை கிரிதரன், கௌரவ விருந்தினர்களாக விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.மகேஸ்வரநாதன், வாகீசர் சனசமூக நிலையத் தலைவர் எஸ். ரவீந்திரன், மாதர் சங்கத் தலைவி எஸ். விஜயமாலினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

## சைவப்புலவர் சங்க செயற்குழு கூட்டம்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண நாவலர் மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இச் செயற்குழுக்கூட்டத்தில் அடுத்தாண்டு நடத்தப்படவுள்ள இளஞ் சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுப் பரீட்சைகளுக்கான விரிவுரை வகுப்புக்கள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9-21)

## பாற்காரன் குறும்பட வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் 6 ஆவது குறும் படமான பாற்காரன் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணிக்கு யாழ். ராஜா திரையரங்கு-II நடைபெறவுள்ளது.

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், கௌரவ விருந்தினராக கரிகணன் பிறிஸ்டோர்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு வரவேற்புரையை யாழ். யோக அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன், அறிமுகவுரையை கே.பிரபாகரன் ஆற்றவுள்ளார்.

இறுவெட்டின் முதல் பிரதியை ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக் கொள்ள வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன் நிகழ்த்தவுள்ளார்.

சிறப்பு பிரதியை கே.எம்.ஏ.எஸ். பொறியியலின் முகாமைத்துவப் பணிப்பாளர் [illegible] பெற்றுக் கொள்ள [illegible] நன்றியுரை [illegible] வுள்ளனர். (அ-9)

# விவசாயிகளிடம் அறவிட்டு வந்த கழிவு நடைமுறை நீக்கப்படுகிறது

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

வட மாகாணத்திலுள்ள சந்தைகளில் விவசாயிகளின் விளைபொருட்களில் 10 விழுக்காடு அளவை விற்பனையாளர்கள் கழிவாகப் பெற்றுவரும் நடைமுறை எதிர்வரும் 2014-ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதியிலிருந்து நீக்கப்படுகின்றது என்று வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்திருக்கும் அறிக்கையில்,

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கும் நாம் சென்று விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததில் அவர்கள் தங்கள் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருந்தனர். இவற்றில் தங்கள் விளைபொருட்களில் 10 விழுக்காடு அளவை விற்பனையாளர்கள் கழிவாகப் பெற்று வருவதைப் பிரதான முறைப்பாடாக வெளிப்படுத்தியிருந்தனர். உதாரணத்துக்கு 100 கிலோ விளைபொருளில் விற்பனையாளர்கள் 10 கிலோவைக் கழிவாக எடுத்துக் கொண்டு 90 கிலோவுக்கே பணம் வழங்கி வருகின்றனர். அதேசமயம் சந்தையை குத்தகைக்கு எடுத்து நடத்துபவர்கள் 100 கிலோவுக்குமான வரியை விவசாயிகளிடம் அறவிட்டு வருகின்றனர். இந்த வரியின் விழுக்காடும் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடுகிறது.

விளைபொருட்களுக்குத் தரத்தின் அடிப்படையில் விலையை நிர்ணயிக்கும் போது இக்கழிவு நடைமுறையால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக முறையிட்ட விவசாயிகள், போராட்ட காலத்தில் அறிமுகமான இக்கழிவு முறைமை இனிமேலும் தொடர்வது நியாயமாகாது என்பதால் இதனை நீக்கித் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவற்றின் அடிப்படையில் வட மாகாணத்தின் உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள் மற்றும் பல்வேறு திணைக்கள அதிகாரிகளையும் அழைத்துக் கலந்துரையாடியதில், எதிர்வரும் 2014, தை முதலாம் திகதியில் இருந்து இக்கழிவு நடைமுறை நீக்கப்படுகின்றது என்றும் குத்தகைக் காரர்கள் அறவிடும் வரி 4 விழுக்காட்டுக்கு மேற்படலாகாது என்றும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு இம்முடிவுகள் வட மாகாண அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களது அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.

மூன்று தசாப்தகாலப் போரும் இடப்பெயர்வுகளும், காலநிலை மாற்றங்களும் விவசாயிகளின் வாழ்வாதாரத்திலும், விவசாயப் பொருளாதாரத்திலும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில், விவசாயிகளுக்கு விவசாயத் தொழில் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தி, சரிவுற்றிருக்கும் விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண விவசாய அமைச்சாலும், உள்ளூராட்சி சபைகளாலும், திணைக்களங்களாலும் எடுக்கப்பட்டிருக்கும் இம் முடிவுகளைத் தீர்க்கமாக நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



ஞானத்திலிருந்து விடுதலை

ஞானத்திலிருந்து விடுதலை என்பது சிந்தனையளவில் மட்டுமே உள்ள அனுபவபூர்வமாகக் கிடைக்காத ஞானத்திலிருந்து வெளிவருதல் என்பதாகும். குவிந்துள்ள ஞானத்தில் அனுபவமே நம்மிடம் இல்லை. இது நமது சொந்த அனுபவமாக ஆகும் வரை இத்தகைய குவிந்துள்ள ஞானத்தின் குவியல் என்பது நமது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாகவே ஆகி விடும். நாம் ஞானத்திலேயே அடைபட்டு விடக் கூடாது. ஆனால் அதனை அனுபவிப்பது நோக்கியே நமது குறிக்கோள் இருக்க வேண்டும். இதுவே உண்மையான கண்டு பிடித்தல் ஆகும். நமது ஆன்மீகப் பயணத்திற்கு நமக்குத் தேவை பகவானின் அருள். நமக்கும் துணை செய்யத் திறந்த மனத்துடன் இருப்பதே. நமது ஞானம் அனுபவமாக ஆகாவிட்டால் அது நமது அகம்பாவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கு உரமாக அமைந்தது. நமது ஆன்மீக வளர்ச்சியைத் தாமதப்படுத்தும். ஒரு நல்ல ஞானியென்பவர், அனைத்து மக்களைக் காட்டிலும் மிகவும் பணிவானவராக இருப்பவர்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சகோதரராக நடத்துங்கள்



❖ மனிதனுக்கு கடவுள் அளித்திருக்கும் இந்த உடல் மகத்தானது. அதை ஒரு நரகக்குகையாக ஆக்குபவன் மன்னிக்க முடியாத குற்றவாளி.

❖ யாரைப் பற்றியாவது கோள் மூட்ட ஒருவன் வந்தால், அதற்கு சிறிதும் செவி சாய்ப்பது கூடாது. பிறரைப் பற்றிய தவறான விஷயங்களைக் கேட்பது பெரும்பாவம்.

❖ மனத்தளர்வு வெற்றிக்கு வழிவகுக்காது. எப்போதும் உள்ளத்தில் உறுதியும், உதட்டில் புன்னகையும் கொண்டிருப்பவனே கடவுளுக்கு விருப்பமானவன்.

❖ நற்செயலில் ஈடுபடுபவருக்கு கைகொடுக்க தயாராகுங்கள். ஒவ்வொரு மனிதனையும் உங்களின் சகோதரனாக நடத்துங்கள்.

❖ தன்னலத்துடன் வாழ்பவன், புண்ணியத்தலம் அனைத்தையும் தரிசித்தாலும் கூட கடவுளுக்கு மிகத் தொலைவில் இருப்பவனே.

❖ அடக்கப்படாத மனம், மனிதனை கீழ்நோக்கி இழுத்து சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ், திரித்துவக் கல்லூரி கிரிக்கெட் சமநிலையில் முடிவு



(மானிப்பாய்)

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் கண்டி திரித்துவக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் கண்டி திரித்துவக் கல்லூரிக்குமிடையிலான 19 வயது பிரிவின் இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயற் சுழற்சியில் வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி தனது முதல் இன்னிங்சிற்காக 61 ஓவர்களில் 171 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சென்.ஜோன்ஸ கல்லூரி சார்பாக பிரிஷங்கர் 45 ஓட்டங்களையும், ஜெனிபிளமிங். ஆபிரகாம அநோஜன் ஆகியோர் தலா 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கண்டி திரித்துவக் கல்லூரி சார்பாக இந்திரேஷ் 39 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய கண்டி திருத்துவக் கல்லூரி 67.5 ஓவர்களில் 123 ஓட்டங்களிற்கு சகல இலக்குகளையும் இழந்தது.

இதில் கண்டி திரித்துவக் கல்லூரி சார்பாக சிறிவர்த்தன, திலகரத்ன மற்றும் கமிந்த தலா 20 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக கானாமிர்தன் 29 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், துவாரகசீலன் 9 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது 2ஆம்இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ கல்லூரி 34.3 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.


துடுப்பாட்டத்தில் சென்.ஜோன்ஸ கல்லூரி சார்பாக பிரிஷங்கர் 59 ஓட்டங்களையும். துவாரகசீலன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கண்டி திரித்துவக் கல்லூரி சார்பாக திலகரத்ன 45 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.


பதலுக்கு தனது 2ஆம் இன்னங்சில் துடுப்பெடுத்தாடிய கண்டி திரித்துவக் கல்லூரி 35 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

கண்டி திரித்துவக் கல்லூரியின் துடுப்பாட்டத்தில் ஷானுக 37 ஓட்டங்களையும், கமிந்த 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் துவாரகன். ஆபிரகாம் அநோஜன், பிரிஷங்கர் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர். (க-23)



## தேசிய மட்ட மேசைப்பந்தாட்டம் இன்று யாழில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், வவுனியா மேசைப்பந்தாட்டச் சங்கங்கள், அபான்ஸ் ஸ்ரக் இன்ரர்நஷனல் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்தத் தொடரின் யாழ்ப்பாணம், வவுனியா, கேகாலை, காலி, கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு, இரத்தினபுரி, பண்டாரவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன், ஆனைக்கோட்டை றோ.க.தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் திருமதி நவலஷ்மி சந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று சனிக்கிழமை பெண்களுக்கான போட்டிகள் இடம்பெற்று அன்று மாலை 6.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு நடைபெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான போட்டி இடம்பெற்று மாலை 7.30 மணிக்கு பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனல்ட் கலந்து கொள்ளவுள்ளார். (கு)

## தலைவர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் முதற் தடவையாக இலங்கை உதைபந்தாட்ட தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட போட்டியை நடத்தவுள்ளது.

இதற்காக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.



விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை வலிகாமம் லீக்கின் தலைவர் அல்லது செயலாளரிடம் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (கு)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

உரும்பிராய் புனித மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு மாவட்ட ரீதியில் அனைத்து விளையாட்டுகழங்களையும் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர் ம.நிசாந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

077 1725432 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெறும் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (க)

## தாச்சி லீக் சுற்றுப் போட்டி; தாவடி காளியம்பாள் வெற்றி

(மானிப்பாய்)

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சி சுற்றுப்போட்டிகள் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இடம்பெற்ற லீக் போட்டியொன்றில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகமும் மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.

இரு அணிகளும் மாறி மாறி பழங்களைப் பெற்றன. முதல் அரைப்பாதியின் போது 3:3 எனும் பழங்கள் அடிப்படையில் இரு அணிகளும் சமநிலையிலிருந்தன.

பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பமானபோது தன்னை சுதாகரித்து ஆடிய தாவடி காளியம்பாள் வீரர்கள் இரண்டாவது அரைப்பாதியின் போது மேலும் 10 பழங்களைப் பெற்ற போதிலும் பதிலுக்கு எந்தப் பழங்களையும் பெறமுடியாது போனமையால் 13:3 என்னும் பழங்கள் அப்படையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (க-23)

## வொற்சன் சிறப்பாக விளையாடினார்: கிளார்க்




அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொற்சன் அணிக்காக விளையாடினார் என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். மூன்றாவது போட்டியில் ஷேன் வொற்சன் விளையாடிய விதத்தினை அவர் புகழ்ந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பிரதான வீரர்களில் ஒருவரான ஷேன் வொற்சன். டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்ட வீரராகப் பிரகாசிக்காத நிலையில் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

அத்தோடு. ஷேன் வொற்சனுக்கும் அணித்தலைவர் மைக்கல் கிளார்க்கிற்குமிடையில் முரண்பாடுகள் காணப்பட்டதாகக் கருதப்பட்டது. முன்னாள் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் கருத்தின்படி ஷேன் வொற்சனை மைக்கல் கிளார்க் "புற்றுநோய்" என அழைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும். மூன்றாவது ஆஷஸ் போட்டியில் ஷேன் வொற்சன் இரண்டாவது இனிங்ஸில் அதிரடியான சதத்தைப் பெற்று அவுஸ்திரேலியாவின் வெற்றியில் முக்கிய பங்கை வகித்தமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க். அதன்போது ஷேன் வொற்சன் மிகச்சிறப்பாக விளையாடியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

அன்றைய நாளில் ஷேன் வொற்சன் அணியை முன்னிறுத்தி ஆடியிருந்ததாகக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க். அந்த நேரத்தில் அவுஸ்திரேலிய அணி வேகமாக ஆட வேண்டிய தேவையிருந்ததாகவும். அதைப் புரிந்து கொண்ட ஷேன் வொற்சன் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததாகக் குறிப்பிட்டார். (க)

## பட்மிண்டன் தரவரிசை; சாய்னா பின்னடைவு



சர்வதேச பட்மிண்டன் சம்மேளனத்தின் தரவரிசைப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையும் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவருமான சாய்னா நேவால் 2 இடங்கள் சரிந்து 8ஆவது இடத்திற்குச் சென்றார். இந்த சீசனில் அவர் சிறப்பாக விளையாடாததால் தரவரிசையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

தென்கொரிய விராங்கனை யியோன் ஜூபே மற்றும் சீன தைபே வீராங்கனை டாய் டிஜுயிங் ஆகியோர் சாய்னாவை முந்தினர். இந்தியாவின் மற்றொரு வீராங்கனை பி.வி.சிந்து 11ஆவது தரநிலையில் நீடிக்கிறார்.

ஆடவர் பிரிவில் பருபள்ளி காஷ்யப் 14ஆவது இடத்தை தக்க வைத்துக்கொண்டார். அஜய் ஜெயராம் 25ஆவது இடத்தில் இருந்து 24ஆவது இடத்திற்கு முன்னேறினார். ஆடவர், மகளிர் மற்றும் கலப்பு இரட்டையர் தரவரிசையில் முதல் 25 இடங்களில் எந்த இந்திய வீரர்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல் பிரிவில்...

மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 97-வது இடத்தையும் பெற்றுள்ளார்.

இதேவேளை ஆசிரியர்களை தெய்வ மாக போற்றி வணங்குவதன் மூலமே கல்வியில் சாதிக்க முடியும். எதிர்காலததில் சிறந்த பொறியியலாளராக மக்களுக்கு சேவை ற்றுவதே தனது நோக்கம் என யாழ்.மாவட்டத்தில் கணித பிரிவில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 3-ம் இடத்தையும் பெற்ற யாழ். இந்துக்கல்லூரி மாணவன் யதுசன் தெரிவித்தார்.

வர்த்தக பிரிவில் யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்ற யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி நிதுஷா ஜெயக்குமார் கூறுகையில், என்போன்ற சக மாணவர்களின் கல்வி வழிகாட்டலுக்கு தன்னாலான உதவியை செய்வேன் என்றும் எதிர்காலத்தில் வங்கி முகாமையாளராக வருவது தான் இலட்சியம் அவர் தெரிவித்தார். வைத்தியசாலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அனைவருக்கும் சேவையாற்ற வேண்டும் என்பதே தனது எதிர்கால இலட்சியம் என்று யாழ்.மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 6-வது இடத்தையும் பெற்ற யாழ். ஹாட்லிக் கல்லூரி மாணவன் தினேஷ் வலம்புரிக்கு தெரிவித்தார்.

வலம்புரிக்கு முதன்மை பெற்ற மாணவர்கள் அளித்த பேட்டி முழுமையாக நாளை வெளிவரும். (செ-6,11)

## தமிழ் மக்கள் மீது...

ளூராட்சிமன்றங்களின் பிரதிநிதிகள் வடக்கிற்கும் தெற்கிற்குமான போக்குவரத்து இலகு படுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு வெறும் நான்கு வருடத்திற்குள் பல அபிவிருத்திகள் செய்யப்பட்டுள்ளன. வீதிகள் காபெற்றிடப்பட்டுள்ளது.ஏ-9 வீதியிலிருந்த சோதனைச்சாவடிக்கள் தளர்த்தப்பட்டுள்ளன எனப் பல விடயங்களை எடுத்துக்கூறி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு துதிபாடினர்.

இந்நிலையில் அவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கில் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பும் பலபிரச்சினைகளைத் தமிழ் மக்கள் ஒவ்வொருநாளும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றனர் .இதனை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ்தான் தமிழ் மக்களின் பல ஆயிரக்கான ஏக்கர் காணிகள் உள்ளன. வடக்கில் வெளிப்புறத்தோற்றத்தில் தான் தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை மீளத்திரும்பியுள்ளது என்று பதிலளித்தார்.'

இதேவேளை வடக்குமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அனுமதியைப்பெற்றுத்தான் வங்கியில் வைப்பிலுள்ள பணத்தை கூட திரும்ப எடுக்க வேண்டிய நிலையில் உள்ளூராட்சிமன்றங்கள் உள்ளன. அத்தோடு அபிவிருத்தி திட்டங்களுக்கான முன்னுரிமைப்படுத்தலும் ஆளுநரிடம்தான் உள்ளது எனப்பல குற்றச்சாட்டுக்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கீழுள்ள பிரதேசசபைகளின் தலைவர் முன் வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## சர்வதேச தரத்தில் அடையாள அட்டை

2014 ஆம் ஆண்டு முதல் சர்வதேச தரத்திலான இலத்திரனியல் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என இலங்கை ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் சகலருக்கும் இந்த இலத்திரனியல் அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை வழங்கப்பட்ட அடையாள அட்டைகளில் தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு சிங்கள மற்றும் தமிழ் மொழியிலும் சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் மட்டுமே அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வந்தன.

புதிதாக வழங்கப்பட உள்ள இலத்திரனியல் அடையாள அட்டையில் இலங்கை தேசிய மொழிகளாள சிங்களமும், தமிழும் இடம்பெற்றிருக்கும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## தொண்டர் ஊழியர்...

கொள்ளப்படுவதாகவும் உறுதிமொழியளிக்கப்பட்டது எனினும் இதனை தொண்டர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

வைத்தியசாலையில் நீண்ட காலமாக தொண்டர் ஊழியர்களாக பணியாற்றிய அனைவருக்கும் இந் நியமனம் வழங்கப்பட வேண்டு மெனவும் அவ்வாறு இல்லை என்றால் எங்கள்முடிவுகள் பாரதூரமாக அமையு மெனவும் தொண்டர்கள் எச்சரித்தனர்.

இதனை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொண்டர்களின் இத் தொடர் போராட்டத்தினால் வைத்தியசாலைப் பணிகள் மற்றும் நோயாளர் பராமரிப்பு என்பன சிரமத்திற்கு உள் ளாகியுள்ளன.

இதேவேளை அரசியற் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் போராட்டத்திலுள்ள தொண்டர்களை குழப்பி வருவதாகவும இந் நியமனம் வழங்கும் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தி வருவதுக வும் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)

## மினிபஸ்...

பெற்றுள்ளது.

இதில் புஸ் நடத்துநர் அஜந்தன் (வயது 40) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

படுகாயடைந்த பயணிகள் அனைவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-250)

## பால்மா...

லங்கையைத் தளமாக கொண்ட வர்த்தக நிறுவனங்களில் பால்மா வகைகளைக் கொள்வனவு செய்யக் கூடியதாகயிருக்கின்ற போதிலும் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலைக்கே விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-6)

## அரசியல் தீர்வை...

உதவுமாறும் மகிந்த ராஜபக்ஷ இதன் போது கேட்டுக்கொண்டார்.

வரவுசெலவுத் திட்டம் 95 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 155 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவுத திட்டத்துக்கு ஆதரவாகவும் 60 பேர் எதிராகவும் வாக்களித்திருந்தனர்.

மாகாணசபை நிர்வாகம் இல்லாதிருந்த வடக்கு மாகாணத்திலும் மாகாண சபை ஒன்றை நிறுவி, பொருளாதார அபிவிருத்தியிலும் ஜனநாயகத்திலும் எமது நாடு முக்கிய தருணத்தை எட்டியிருக்கின்ற சூழ்நிலையில் இந்த வரவு செலவுத் திட்ட விவாதம் நடக்கிறது என்றார் மகிந்த ராஜபக்ஷ.ஆளுங்கட்சிக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடையிலான இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் நீண்ட காலமாக முடங்கிக் கிடக்கின்றன.

வடக்கு மாகாண சபையில் அரச சேவைகளை பலப்படுத்தவும் மும்மொழி செயற்திட்டத்தை விரிவுபடுத்தவும் வீட்டு வசதிகளையும் வாழ்வாதாரங்களையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது கூறினார்.

நான் தலைவர் ஆர். சம்பந்தனிடமும் இந்த நாடாளுமன்றத்திடமும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாண சபையிடமும் நல்லிணக்கத்துக்காகவும் சமாதானத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் எமது நாட்டுக்கே உரித்தான வகையில் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக எம்மோடு இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன் என்றார் ஜனாதிபதி. (செ-11)


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சிவபாலன்

தோற்றம் :- 27.07.1976 மறைவு :- 21.12.2007



ஆண்டுகள் ஆறு ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே பேபி
எம்மையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா
உங்கள் பாலகன் நான் திருவரங்கன்
உங்கள் முகம் பார்க்குமுன்னே எங்குதான் சென்றீரோ!

பிரிவால் துயருறும்,
சி.தயாளினி(மனைவி),
சி.திருவரங்கன்(மகன்).

ஐங்கரன் இல்லம், தொல்புரம், வழுக்கம்பாறை.

(5141)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலக
ஆவணந்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## 95 மேலதிக...

வாக்களித்தன.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்கத்தின் மொத்தச் செலவீனம் 154, 252 கோடி 25 லட்சம் 18 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதிலே பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்காக 25, 390 கோடி 29 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்து நிதி, திட்டமிடல் அமைச்சிற்காக 16, 434 கோடி 407 லட்சத்து 80 ஆயிரம் ரூபாயும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு 10,601 கோடி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும ஒதுக்கப்பட்டுள்ளது.


இந்த மூன்று அமைச்சுகளில் இரண்டு அமைச்சுகள் ஜனாதிபதி யின் பொறுப்பின் கீழ் உளளதுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷவின் பொறுப்பின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

*Learn French The French Way*

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af




**யார் AF இல் French படிக்க முடியும்?**

திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4...
- *Teaching materials* are given with *free* of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE course)
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி... .

➤ Just say "Yes, I can.. speak French"
*AF is the only International Organization for French in Northern Province*


**கவனிக்கவும்** :
DELF A1 பரீட்சை : 14.12.2013 பரீட்சைக்கு தோற்றுவோர் AF ஊடாக விண்ணப்பிக்கலாம்.
பரீட்சை கட்டணம் : 3000 Rs. (AF மாணவர்களுக்கு) 8500 Rs. (ஏனையோருக்கு). இப்பரீட்சையை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான "தயார்ப்படுத்தல் வகுப்பு" சனி, ஞாயிறு at 8.30 am

**புதிய வகுப்பு விரைவில் ... உடன் பதிவு செய்யவும்.**

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்) (4810)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சிவபாலன்



மண்ணில் 27.07.1976

விண்ணில் 21.12.2007



எங்களை வாழவைத்த தெய்வமாய்
நல்வழிகாட்டி நல்லூக்கம் தந்து
சான்றோராய் எம்முடன் வாழ்ந்து எம்
புகழ்பரப்ப வைத்த அன்பு நண்பனே
நீங்கள் எம்மை விட்டுபிரிந்து
ஆண்டுகள் ஆறு ஆனாலும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்

பிரிவால் வாடும்
நண்பர்கள்

(C-5114)


க.பொ.த உயர்தரத்தில் A சித்தியைப்பெற்றுள்ளீர்களா, பின்வரும் கற்கைநெறிகளிற்கு 100% வரை புலமைப்பரிசில்கள்

**CIMA-UK, COMPUTER ENGINEERING USA**

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையவில்லையா? கவலையை விடுங்கள். வேலைவாய்ப்பு அதிகமுள்ள கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிகிறி, அமெரிக்க கணினிப்பொறியியலாளர் கற்கை நெறிகள் உங்களை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும்.

புலமைப்பரிசிலிற்கு <NAME> <Course><AL Result> என்பவற்றை type செய்து 772 395 895க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?
உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள் : 0779086737
GUNAA BEST PC Computer Repair
52, Hospital Road, Jaffna.



# ACCA

**க.பொ.த (உ/த)**
**பெறுபேறுகள் அடிப்படையில்**
**மாபெரும்**
**புலமைப் பரிசில் திட்டம் (200)**
**2014/2015**

............................

- எத் துறை சார்ந்தும் 3C யும் அதற்கு மேற்பட்ட பெறுபேறுகளும் (S தவிர). மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 25-12-2013 ற்கு முன்பாக விண்ணப்பித்து பெறுமதி மிக்க புலமைப் பரிசிலினை தட்டிச் செல்லுங்கள்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர்:..................................................
2. முதலெழுத்துடன் பெயர்:..........................................
3. தபாலிடல் முகவரி:..............................................
   ..........................................................
4. பிறந்த திகதி:....................................................
5. வயது........................ பால்:........................
6. கற்கை துறை:.....................................................
   சுட்டெண்:.........................................................
   பெறுபேறு:........................................................
7. தொலைபேசி இல:..................................................

மேலே தரப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மை என உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி.............. ..............................
கையொப்பம்

## விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

தலைவர்,
முகாமைத்துவ சபை,
ACCA கற்கை வழிகாட்டல் அலகு,
182, சேர். பொன். இராமநாதன் வீதி,
(யா/பல்கலைக்கழகம் முன்பாக)
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி பத்திரிகையின் 14 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ACCA கற்கை அமைப்பு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

(C-5840)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.